# ஜீவன்முக்தி விவேகம்

ப்ரக்ஞன்



# ஜீவன்முக்தி விவேகம்

தெளிவுரை

ப்ரக்ஞன்

## ஜீவன்முக்தி விவேகம்

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஜீவன்முக்தி பற்றிய வேத அதிகாரம் | 16 |
| 2. | விவிதிஷா சந்நியாஸம் | 19 |
| 3. | நான்குவகை சந்நியாஸ வாழ்க்கை | 21 |
| 4. | பரமஹம்ஸர்கள் இரண்டு வகையினர் | 27 |
| 5. | வித்வத் சந்நியாஸம் | 31 |
| 6. | ஜீவன்முக்தியின் தன்மை | 37 |
| 7. | ஜீவன்முக்தனின் பண்புகள் | 41 |
| 8. | விதேஹ முக்தி | 45 |
| 9. | ஸ்திதப்ப்ரக்ஞன் | 52 |
| 10. | குணாதீதன் | 61 |
| 11. | பிராமணன் | 64 |
| 12. | அதிவர்ணாஸ்ரமி | 69 |

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஜீவன்முக்தி விவேகம் |
| தெளிவுரை | : | ப்ரக்ஞன் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2023 |
| வெளியீடு | : | பராபரம் - கோவை. |
| பக்கங்கள் | : | 71 |
| விலை | : | அக விழிப்பு |

பதிப்பாளர் : ஓம் கிராபிக்ஸ்
கோயமுத்தூர்.

வித்தன்றி யாதும் விளைவதுண்டோ நின்னருளாஞ்
சித்தன்றி யாங்களுண்டோ செப்பாய் பராபரமே.

– தாயுமானவர்.

# முகவுரை

ஜீவன்முக்தி என்ற இந்த வார்த்தையை கேட்டவுடன் பலரையும் பிரம்மிப்பிலும், பயத்திலும், தேடலிலும் ஆழ்த்தும் ஒரு சொல்லாக இருக்கின்றது.

ஜீவன்முக்தி என்றால், உயிருடன் இருக்கும் போதே அடையும் முக்தி என்றவுடன், என்னது? உயிருடன் இருக்கும் போதே முக்தியா?

அது எப்படி சாத்தியம்? என்கின்றனர் பலர்.

பெரும்பாலானவர்கள் முக்தி என்றால், ஏதோ இறந்த பிறகு அடைவது என்று கருதிக்கொண்டு, வைணவராக இருந்தால், வைகுண்டதிற்கும், சைவர்களாக இருந்தால், கயிலாயதிற்கும் செல்வது முக்தி என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

அதெப்படி, வாழும்போதே முக்தி கிடைக்கும்?

அதற்கு முதலில், முக்தி என்றால், என்னவென்று தெளிவாக நாம் புரிந்துக் கொள்ள வேண்டும்.

முக்தி என்பது ஒரு வடமொழிச் சொல். அதற்கு தமிழில் "**விடுதலை**" என்று பொருள்.

எதில் இருந்து விடுதலை?

நம் மனதில் இருந்துதான் விடுதலை.

இப்பிரபஞ்சத்தில் நம் மனதைத் தவிர வேறு எதற்குமே நாம் அடிமையாக இருக்கவில்லை. நம்முடைய வாழ்க்கையை சுக, போகங்களுடன் வாழ வைப்பதும், அவ்வாறு, வாழ முடியாமல் செய்வதும் இதே மனம்தான்.

அதுப்போலவே, ஈஸ்வர சங்கல்பமான இந்த ஒட்டு மொத்த பிரபஞ்ச மனதிலே, மூக்கை நுழைத்து இது சரி!, இது தவறு! என்று அதிகப்பிரசங்கித்தனமாக, மனம் போன போக்கிலே போக வைப்பதும், நம் தனித்த மனம்தான்.

இத்தகைய தனித்த தன் மனதின் பிடியில் இருந்து, தன்னை விடுவித்துக் கொள்வதே, இங்கு உண்மையில் விடுதலை எனப்படுகின்றது.

அதாவது, மனோ நாசமே முக்தி ஆகும்.

அவ்வாறு, நாம் உயிருடன் இந்த உடலில் இருக்கும் போதே நம் மனதை ஜெயித்து, கற்பனைகளைக் கடந்து, சிந்தையை நினைப்பர வைத்தோமேயானால், அதுவே ஜீவன் முக்தி எனப்படும்.

"முக்தி என்பது ஒருவன் வாழ்நாளில் அடையப்பட வேண்டுமே தவிர, செத்தபிறகு எங்கோ சென்று அடைவது அல்ல" என்று மகரிஷி வசிஷ்டர் தன் யோகவாசிஷ்டம் என்னும் நூலில் தீர்கமாக மொழிகிறார்.

விஜயநகர சாம்ராஜ்யத்தை நிறுவியவரும், அத்வைத சந்நியாசியுமான வித்யாரண்யர் தமது ஜீவன் முக்தி விவேகம் என்ற நூலில் ஜீவன்முக்தி அடைவதை பற்றிய அரிய பல விளக்கங்களை யோகவாசிஷ்டம் என்ற நூலை ஆதாரமாகக் கொண்டு, ஜீவன்முக்தி அடையும் யோகியின் ஏழு நிலைகளைப் பற்றி விளக்குகின்றார்.

ज्ञायनभूमि: शुभेच्छख्या प्रथमा समुदाहृता
विचारणा द्वितीया स्यात् तृतीया तनुमानसा ॥
सत्वापत्तिश्चतुर्थी स्यात्तत्तो संसक्तिनामिका
पदार्थोभाविनी षष्टि सप्तमी तुर्यगा स्मृता ॥

அதாவது, ஜீவன் முக்தி அடைய விரும்பும் ஆர்வமுள்ள முமுக்ஷு முதலில் புனிதமானதை அடைய ஆசை உள்ளவனாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, சுயமாக பாடங்களைக் கற்பதினாலும், அதற்கான சந்தேகங்களில் தெளிவை அடைய வேண்டி, நல்லோர்களின் நட்பை உண்டாக்கிக் கொள்வதினாலும் உண்மையை ஆராய முற்படுகிறான்.

மூன்றாவதாக, அவ்வாறு அறிந்த உண்மைத் தன்மை என்பது, ப்ரம்மம் சத்தியம், ஜகத் மித்யா என்ற உயரிய உபதேசத்தின் வாயிலாக, உண்மை/மாயை நிலைகளை உணர்வதால், அமைதியான மனநிலையை அடைந்தவன் ஆகிறான்.

இத்தகைய அமைதியான மனநிலையை அடைந்து, முதல் மூன்று நிலைகளில் எடுத்த முயற்சியால், பரம[தன்]னையும் அறிந்துக் கொண்டு விடுவதால், அடுத்த நான்காவது நிலையில், ஒன்றேயான ப்ரம்மத்தை குறிந்த ஞானத்தை அடைகிறான்.

இந்த நான்கு நிலைகளில் பெறப்படும் ஞானத்தால் சாதகன் ஐந்தாவது நிலையில் தனக்கும், இந்த உலகிற்கும் உள்ள பற்றை மனத்தினால் துறக்கிறான்.

ஆறாவது நிலையில், பற்றறுத்து ஆத்ம ஞானத்தை அடைந்த அந்த சாதகன் பேதங்களற்ற நிலையில் தன்னையே துறக்கிறான்.

ஏழாவது நிலையில், இருப்பது நான் மட்டுமே என்ற ஏகாந்த மனதினால், முக்தியை அடைகிறான்.

இதிலே, முக்தி என்ற இந்த நிலை வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஒன்று. அதை அனுபவித்தே உணரமுடியும் என்றும், அதை அடைந்தவர்கள் கூட மற்றவர்களுக்கு தெளிவாக விளக்க முடியாது என்றும் உள்ளதினால், நாம் ஒவ்வொருவரும் நம் மனதை மட்டுமே கடப்பதற்கான கருவியாக, இதுப்போன்ற சாஸ்திரங்களையும், சத்குருவையும் நாடி கற்க வேண்டும்.

பொதுவாக, நம் அனுபவம், சிந்தனைகள் எல்லாம் மனம் என்ற கருவியைக் கொண்டே நடக்கிறது. ஆனால், முக்தி நிலை என்பது, மனங்களைக் கடந்த நிலை என்பதால், அதிலிருந்து வரும் சிந்தனைகளாலோ, சொற்களாலோ, எழுத்துக்களாலோ விவரிக்க இயல்வதில்லை.

அப்படி என்றால் என்னதான் செய்வது?

மனம் அழிய வேண்டும் என்ற, அதற்கான பயிற்சியில் இருப்பதே உண்மையில் ஆன்மீகம் ஆகும். அதாவது, மனமற்ற நிலையில், அந்த ஆன்மாவை உணர்வது ஒன்றே ஆன்மீகம் ஆகும்.

அதற்காகத்தான் பூசைகள், வழிபாடுகள், கோவில்கள் எல்லாமே, முதலில் நம் மனதை தூய்மையாக்கி, அதன்பிறகு மனமற்ற நிலைக்கு அழைத்துச் செல்கின்ற சாதனங்கள் ஆகும்.

இதிலே, பொதுவாக, **“நான்”** என்று நம்மை நாம் கூறுவது, இந்த உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றின் ஒட்டுமொத்த தொகுப்பு எனலம்.

ஆக, இந்த மூன்று கூறுகளையும் ஒன்றாகக் கட்டும் போது, நான் என்ற எண்ணம், அதாவது “நான் இருக்கிறேன்” என்ற சிந்தனை உருவாகிறது. அந்த **நான்** என்ற அடிப்படைச் சிந்தனையை ஈகோ என்கிறோம்.

உடலுக்கும், ஆன்மாவிற்கும் இணைப்புப் பாலமாக இருப்பது நான் என்ற சிந்தனை. அதைச் சுற்றி பின்னப்பட்ட ஆயிரமாயிரம் எண்ணங்களே மனம் என்று நாம் கூறுகிறோம்.

இந்த மனம் என்கின்ற இணைப்புப் பாலம் துண்டிக்கப் பட்டால், உடல் வேறாக, ஆன்மா வேறாக இருக்கும் நிலையை இந்த உடலிலேயே உணர்வதுதான் **ஜீவன் முக்தி**.

அவ்வாறு, ஜீவன் முக்தி நிலையை சாதிக்க சரியான சத்குரு (ஜீவன் முக்தர்) ஒருவரின் உதவியும் அவசியம் ஆகும். விவேகானந்தருக்கு பரமஹம்சர் கிடைத்தது போன்று, நம் ஒவ்வொருவருக்கும் ஒரு வழிகாட்டி கிடைக்க வேண்டும்.

இந்த முக்திக்கான முயற்சியாக, நாம் பல்வேறு பிறவிகளாக முயன்று முக்தி அடைவதை விளக்கும் ஒரு உபநிடதக் கதையில் வருகின்ற உவமானம் என்னவெனில், ஒரு உப்பு பொம்மை கடலின் ஆழம் காணப் புறப்பட்டு போய், அந்த கடலிலேயே ஒன்றாகக் கரைந்து போனதாம்.

அவ்வாறு, **நான் யார்?** என்று, நம்மை நாம் தேடத் தொடங்கி, இறுதியில் நான் என்ற நினைவே மாயை ஆகும்.

அதாவது, எதைத்தேடி இந்த **'நான்'** புறப்படதோ? அந்த தேடும் பொருளாகவே **நான்** உள்ளது. இதை அறியும் போது, எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்து, நிலைத்துள்ள பரம்பொருள் **"நான்"** என்று உணர்தலே, இந்த **நான்** அடையும் இறுதி நிலை.

அதாவது, முதலில் நாம் கட்டுண்டு இருக்கிறோம் என்பதை உணர்தல். அடுத்து, எதில் கட்டுண்டு இருக்கிறோம்? என்று உணர்தல். பிறகு, அந்த கட்டுக்களைத் தவிர்க்க வழிகள் உண்டா? என்று ஆராய்தல் அதற்கடுத்த நிலை.

அத்தகைய கட்டுக்களை அவிழ்த்தவர்கள் உண்டா? என்று தேடிச் சரணடைந்து, அவர்கள் வழி நிற்றல் அதற்கும் அடுத்த நிலை. இவ்வாறு, நம் கட்டுக்களை எல்லாம் அவிழ்க்க சுய முனைப்போடு செயல்பட்டு விடுபட்டால், அதுவே இறுதி நிலை.

உதாரணமாக, இந்த பூமியில் நம்முடைய கால் பதித்திருக்கும் வரை, பூமியின் புவியீர்ப்பு விசை என்ற ஒன்றைப் பற்றி நாம் உணர்வதில்லை.

அதைப்போல, நம்முடைய அன்றாட வாழ்வியலான உண்ணல், உறங்கல், ஊடல், கூடல் என்ற சுழலில் பம்பரம் போல் சுழன்று கொண்டிருக்கும் வரை, நாம் ஏன் இந்த

சுழற்சிக்கு ஆட்படுகிறோம்? என்ற சிந்தனை நம்மில் பலருக்கும் வருவதில்லை.

பூமியை விட்டு வெளியேறும்போதே, புவி ஈர்ப்புவிசை இருப்பதை நாம் உணர்வோம். மேலும் பொருட்கள் மேலிருந்து கீழ் விழுவதை இயற்கை என்று, அதைப் பற்றி அறிய ஆவல் கொள்ளாமல் வாழ்பவர்கள்தான் இன்று பெரும்பாலானவர்கள்.

அதிலே, யாரோ ஒருவன் மட்டுமே ஏன்? இவ்வாறு பொருட்கள் கீழே விழுகின்றன என்பதை ஆராய்ந்து, அதற்கான புவி ஈர்ப்பு விசை பற்றி அறிவதுப் போல, வாழ்வில் வரும் இன்ப, துன்பங்கள் ஏன்? என்று சிந்திப்பவர்களும் கோடியில் ஒருவரே.

அதுப்போல, இந்த **பிறப்பு – இறப்பு** என்ற ஒன்றே இல்லை. அது மனதில் நிகழும் மாயை என்று மகான்கள் கூறவதை யாரோ ஒருசிலர் மட்டுமே சிந்தித்து, அதற்கான விடையை அறிய ஆவல் கொள்கின்றனர்.

அவர்கள் மட்டுமே, அரிதான மனிதப் பிறவியில் தனக்கு கிடைத்துள்ள பிரத்யேக மனம் என்ற ஆறாவது அறிவாகிய பகுத்தறிவைப் பயன்படுத்தி, மனமழிந்த முக்தி நிலையில் உடல் மட்டுமே தோன்றி மறைகிறது. உண்மையில், நான் மறைவதில்லை. நான் என்றுமுள்ள பரம்பொருள்.

இந்த மனதால் ஏற்றிய எண்ணங்களால் விளைந்த செயல் விளைவுகளினால் உண்டாகிய கர்ம வினைகளைக்

கழிக்கவே, இந்த உடல் தோன்றி மறைகிறது. இதை உணர்வதே ஆன்மீகத்தின் உச்சம் என்று அறிகிறார்கள்.

மேலும், அதில் உள்ள வழிபாடுகள், சடங்குகள் என எல்லாமே நம் மனதைக் கடக்க உதவும் மகத்தான வழிமுறைகளே எனவும் உணர்கிறார்கள்.

முக்தி, விடுதலை, மோக்ஷம் (மோஹ: = ஆசைகள். க்ஷயம் = மறைதல்), அதாவது ஆசைகள் மறைவதே மோக்ஷம். இதை உணர்வதே, ஜீவன் முக்தி நிலை எனலாம்.

நன்றி!

என்றும் அன்புடன்,

ப்ரக்ஞன்.

# ஜீவன்முக்தி விவேகம்

சம்சாரத்திலிருந்து மோக்ஷம் அல்லது முக்தி வரை ஏழு படிகள் உள்ளதாக ஸ்ரீ வித்யாரண்யர் விளக்கியுள்ளார்.

அவைகள்,

1. அக்ஞானம் – அறியாமை
2. ஆவரணம் – அக்ஞானத்தை வெளிப்படுத்துதல், இது எனது அறியாமை என்று தெரிந்து கொள்ளுதல்
3. விக்ஷேபம் – சோகரூபம் – துயரப்படுதல்
4. பரோக்ஷ ஞானம்
5. அபரோக்ஷ ஞானம்
6. சோக நிவிருத்தி
7. திருப்தி – மனநிறைவு

அடுத்து, பத்தாவது மனிதன் கதையில் உள்ள ஏழு சொற்களின் விளக்கத்தைப் பொருத்தி காட்டுகிறார்.

1. அக்ஞானம் – பத்தாவது மனிதன் காணவில்லை
2. ஆவரணம் – எண்ணியவுடன் பத்தாவது மனிதன் இல்லையென்று அறிதல்.
3. விக்ஷேபம் – பத்தாவது மனிதன் தொலைந்து விட்டான் என்ற துயரம்.

4. பரோக்ஷ ஞானம் – வேறொருவன் பத்தாவது மனிதன் இருக்கின்றான் என்று சொல்லும்போது அறிந்து கொள்வது.
5. அபரோக்ஷ ஞானம்– அவனை வரிசையில் நிற்க வைத்து எண்ணியவுடன், தான்தான் பத்தாவது மனிதன் என்று அறிந்து கொள்கின்றான்.
6. சோக நிவிருத்தி – மனதிலடைந்த சோகம் நீங்குதல்.
7. திருப்தி – அதனால் மனநிறைவு அடைதல்.

## 1. ஜீவன்முக்தி பற்றிய வேத அதிகாரம்

ஜீவன் முக்தி அத்வைத சித்தாந்த நூலில் மிகச்சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இதை ஸ்ருதியும் அநேக வழிகளில் ஆதரிக்கிறது.

உதாரணமாக, "अत्र ब्रह्म समश्नुते" (அத்ர ப்ரஹ்ம சமஸ்ர்னுதே) என்ற வாக்கின் மூலம், இந்த உடல் இருக்கும் பொழுதே முக்தி பெறுவதுதான் ஜீவன்முக்தி என்பது தெரிகிறது.

சிரவணம், மனனம் மற்றும் நிதித்யாஸனம் (கேட்டல், சிந்தித்தல், நிலைத்தல்) ஆகியவைகள் மூலம், ஆழ்ந்த அப்பியாசம் செய்து, மனதின் வாசனைகளை எல்லாம் அழித்த பின்பு, ஜீவன்முக்தி கிட்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஜீவன்முக்தி அடைந்த அவனுடைய நிலை எப்படி இருக்கும் என்பதை, ஸ்ரீ ஸதாசிவ பிரஹமேந்த்ரர் தமது ஸ்லோகத்தின் வாயிலாக, சூரியனே குளிர்ச்சி அடைந்தாலும் அல்லது சந்திரனே சூடாக ஆகிவிட்டாலும், நெருப்பு கீழ்நோக்கி ஜ்வாலை விட்டாலும்கூட, அந்த ஜீவனுக்கு வியப்பு ஏற்படாது என இவ்வாறு கூறியிருக்கிறார்.

ஜனகரும் "மிதிலை நகரமே எரிந்து போனாலும் எனக்கு எவ்விளைவும் ஏற்படாது" என்று குறிப்பிடுகிறார்.

எப்பொழுதும் எங்கும் ப்ரஹமத்தை ஸச்சிதானந்த (இருப்பு, அறிவு ஆனந்தம்) உருவத்தில் காணும் ஜீவனுக்கு எந்த விளைவும் ஏற்படாது என்பதை இது காண்பிக்கிறது.

ஸ்ரீகிருஷ்ண பகவான் ஜீவன் முக்தனிடம் காணப்படும் குணங்களை சித்தரித்திருக்கிறார். ஜீவன் முக்தனுக்கு எதனிடமும் துவேஷம் கிடையாது.

புகழையும், கண்டனத்தையும் சமமாக கருதுகின்ற அவன், மௌனமாகவும் திருப்தி உள்ளவனாகவும், திட சித்தம் கொண்டவனாகவும், பக்தி கொண்டவனாகவும் இருக்கிறான். இப்படிப்பட்டவனை எனக்கு மிகவும் பிடிக்கும் என்பது பகவானின் அருள்வாக்கு.

ஆகவே, ஜீவன்முக்தன் என்பது, ஒருவன் தன் மனதை துறப்பதே ஆகும். அதுவே, உண்மையில் சந்நியாஸம் ஆகும்.

‘சம்யக்’ என்றால், சரியானது.

’நியாஸம்’ என்றால், துறப்பது.

சம்யக் + நியாசம் = சந்நியாஸம்.

ஆக, சந்நியாஸம் என்றால், ‘சரியானவற்றைத் துறப்பது’.

அப்படிப்பட்ட சந்நியாஸம் என்பது விவிதிஷா சந்நியாஸம் மற்றும் வித்வத் சந்நியாஸம் என இரண்டு வகைப்படும்.

முதலாவது, மரணத்திற்குப் பின் அடையும் முக்திக்குக் காரணம் (விதேஹமுக்தி) மற்றும் உடலில் வாழும்போதே அடையும் முக்திக்குக் காரணம் (ஜீவன்முக்தி).

இந்த இரண்டு வகையான சந்நியாசங்களுக்கும் இன்றியமையாதது வைராக்கியம் எனப்படும் மனதின் பற்றின்மை ஆகும்.

அத்தகைய, பற்றின்மை இரண்டு வகைப்படும். ஒன்று பலவீனம் மற்றொன்று வலிமையானது எனலாம்.

அன்பானவரின் மரணம் அல்லது உடைமைகள் இழப்பு போன்ற சில பேரழிவுகள் ஏற்பட்டால் ஏற்படும், பற்றின்மை நீடித்தது அல்ல. அது பலவீனமானது என்று வகைப்படுத்தப் படுகிறது. இப்படிப்பட்ட தற்காலிகப் பற்றின்மை உணர்வால் எந்தப் பயனும் இல்லை. இது ஒருவரை சன்னியாசத்திற்குத் தகுதியுடையவராக ஆக்கிவிடாது.

அதுப்போலவே, திருமணம், குழந்தைகளைப் பெற்று, இல்லற வாழ்வு வாழக் கூடாது என்ற மன உறுதியானது 'வலிமையான' பற்றின்மை என்பதில் வகைப்படுத்தப்படுகிறது.

## 2. விவிதிஷா சந்நியாஸம் (தேடுபவனை துறத்தல்)

இந்தப் பிறவியிலோ அல்லது முற்பிறவியிலோ வேதங்களைப் பயின்று, வேதங்கள் விதித்த சடங்குகளை நிறைவேற்றியதின் விளைவாக, ஒருவனுக்கு ஆத்ம உணர்வின் மீது ஆசை எழுகிறது.

அத்தகைய ஆசையின் விளைவாக துறப்பது விவிதிஷா சன்னியாசம் அல்லது 'தேடுபவனை துறத்தல்' என்று அழைக்கப்படுகிறது.

(விவிதிஷா என்றால் 'அறியும் ஆசை').

விவிதிஷா சந்நியாசத்தில் நான்கு வகைகள் உள்ளன. அவைகள்,

1. **குடீச்சகா**
2. **பஹூதகா**
3. **ஹம்ஸம்**
4. **பரம ஹம்ஸம்** போன்றவைகளாகும்.

இவைகளால், பிறவிப் பிணிக்கு காரணமான சம்சாரம் நாசமாகும். இதிலே, சந்நியாஸம் என்பது, மனதின் விருப்பு,

வெறுப்பற்ற விவேகத்தினால் (ஞானத்தினால்) உண்டான "**வைராக்கியம்**" மட்டுமே ஆகும்.

இதிலே, 'வலிமையானது' என்று விவரிக்கப்படும் பற்றின்மை, குடிச்சகா மற்றும் பஹூதகா எனப்படும் சந்நியாச வகைகளுக்கு மட்டுமே தகுதியுடையவராக ஆக்குகிறது.

அவைகள் இரண்டும், '**திரிதாண்டின்கள்**' எனப்படும்.

அதாவது, அவைகள் மூன்று நீண்ட மெல்லிய குச்சிகளை ஒன்றாக முடிச்சுப் போடுகின்றன, **உடல், மனம்** மற்றும் **பேச்சு** ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்தையும் மூன்று முறை துறந்ததன் அடையாளமாகும்.

இந்த விருப்பு, வெறுப்பற்ற வைராக்கியம் கொண்டு இருப்பவர்கள் எந்த உடையில் இருந்தாலும், எந்த திசையில் வாழ்ந்தாலும், எந்த சூழ்நிலையில் இருந்தாலும், அவரை **'சந்நியாஸி'** என்றே கருத வேண்டும்.

அதை விடுத்து, காவி உடைகளை மட்டுமே அணிந்துக் கொண்டு இருப்பவர்களையும், பகட்டுக்காக சிலர் போடும் காவி வேடங்களையும் வைத்தும் **"சந்நியாஸி"** என்று கூறுதல் சந்நியாஸ தர்மம் ஆகாது.

## 3. நான்கு வகை சந்நியாஸ வாழ்க்கை

விருப்பு, வெறுப்புகள் இன்றி, வீட்டை விட்டு வெளியே செல்ல சக்தியற்று, தன்னுடைய குடும்பத்தில் இருந்துக் கொண்டு, வெளியே சென்று பிச்சை எடுத்து உண்ண விரும்ப மாட்டார்கள்.

இவர்கள், தன் மகன் உதவியினாலும், சுற்றத்தார்கள் உதவியினாலும், தன்னுடைய வயிற்றுப் பசியை மட்டும் தீர்த்துக் கொண்டு, வேறு எதையும் விரும்பாமல், தனியாக தனிக்குடிலில் வசித்து வருகின்ற வாழ்க்கை முறையை **'குடீச்சகா'** என்று அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு, இவர்கள் தனிமையில் இருந்துக் கொண்டு, சாஸ்திர விசயங்களை கேட்டல் (சிரவணம்), கேட்ட விசயங்களைப் பற்றி சிந்தித்தல் (மனனம்), அடுத்து, அந்த சாஸ்திரங்களில் கூறப்பட்ட மகா வாக்கிய விசாரத்தினால் உண்டான ஞானத்தினால், தன் உண்மை சொரூபத்தை அறிந்து, அதில் எப்பொழுதும் திடமாய் நிற்கின்ற நடை முறையில் (நிதித்யாஸனம்) இருந்துக் கொண்டு, ஜீவன் முக்தர்கள் ஆகின்றனர்.

இவர்கள் **"குடீச்சகா"** என்ற சந்நியாஸ வாழ்க்கை முறையை வாழ்கின்றவர்கள்.

இது, இன்றைய காலங்களில் தனியாக குடில் அமைத்து வாழ்வது என்பது, நடைமுறையில் சாத்தியம் இல்லை என்பதினால், ஒரே வீட்டில் தனியாக, ஒரு தனி அறையில் இருந்துக் கொள்ள வேண்டியது எனலாம்.

இரண்டாவது வகையான சந்நியாஸிகள் பஹூதகா சந்நியாஸிகள்.

இவர்கள், வெளியே மற்றவர்களால் கொடுக்கின்ற உணவை பிச்சை ஏற்று உண்பதும், தொடர்ந்து ஒரு இடத்தில் தங்காமல், பல இடங்களுக்கு இடம் மாறி பிரயாணங்கள் மேற்கொள்வதும் என ஊர் ஊராக சுற்றி, திரிந்துக் கொண்டு இருப்பர்.

உண்ண உணவே கிடைக்காத சில இடங்களுக்குச் சென்றாலும், பழங்களையும், துளசி, வில்வம், பால், நெய் போன்றவைகளை மட்டுமே உணவாக உண்டு பசியாற்றிக் கொள்வதுப் போன்ற சில நியமங்களை இவர்களாகவே வகுத்துக் கொண்டு, தீவிர வைராக்கியத்தில் திடமாக இருக்கின்றனர்.

இவர்களது இந்த வாழ்க்கை முறையினை **"பஹூதகா"** அல்லது "வெகூதகம்" எனப்படுகின்றது.

ஒருவன் இவ்வுலகின் இன்பங்கள்மீது மட்டும் ஆசை வைக்காமல், சொர்க்கம், பிரம்மலோகம் போன்ற உலகங்களில் உள்ளவற்றின் மீதும் ஆசை வைப்பதிலிருந்து விடுபடுவது

என்பதுக்கூட, மீண்டும், மீண்டும் பிறப்பு இறப்புகளையே விளைவிக்கும் ஒருவகையான **சம்ஸார பந்தம்** என்ற அறிவின் காரணமாக, அவனுக்கு உண்டான பற்றற்ற நிலை என்று கூறப்படுகிறது.

அடுத்து, மூன்றாவது சந்நியாஸ முறையான **'ஹம்ஸம்'** என்பதை அன்னப்பறவை என்றும், பிராணவாயு என்றும் தமிழ் மொழியில் பொருள் விளக்கம் கூறப்படுகின்றது.

இதில், அன்னப்பறவை என்றாலும், பிராணன் என்ற மூச்சுக்காற்று என்றாலும், இந்த **'ஹம்ஸம்'** என்பதை குறிக்கின்றது.

இந்த சந்நியாஸ வாழ்க்கை முறையை நம் முன்னோர்கள், "**சப்தமில்லாத சப்தம்**" என்கின்றனர்.

மூச்சை உள்ளே இழுக்கும் போது, சுவாசம் "**ஸம்**"என்ற சப்தத்துடன் போவதையும், மூச்சு வெளியேறும்போது அது "**ஹம்**" என்ற சப்தத்துடன் வெளியேறுவதையும் கவனிக்க முடியும்.

இதை"**ஹம்ஸம்**" எனக் கூறுகின்றனர்.

இதையே, இனி ஒருவிதமாக "**ஸோ**", "**ஹம்**" என்றும் கூறுவதுண்டு.

இவ்வாறு, இந்த மூச்சில் உண்டாகும் அதன் சப்தத்தில் தொடர்ந்து லயித்திருக்க பரவச நிலை உண்டாகும்.

இதனையே செபிக்காத மந்திரம், பேசாத மந்திரம் எனப் பலவாறாகக் கூறுவர். இதனை, 'அஜபா ஜெபம்', 'அஜபா காயத்திரி' என்றும் கூறுவதுண்டு.

இந்த பயிற்சியினை தொடர்ந்து செய்து வந்தால் மனம் பரவச நிலையை உணர ஆரம்பிக்கும். அவர்களுக்கு பிராணன் மட்டுமே உணவாகவும் மாற ஆரம்பிக்கும்.

இதுபோன்ற பயிற்சியினால், இந்த ஸ்தூல சரீரத்தை காப்பாற்றிக் கொண்டு, மூச்சுக் காற்றையே உணவாக உண்டு, பல காலங்கள் உயிர் வாழுகின்ற தீவிர வைராக்கியம் உடைய ஒரு பிரிவினரை, "ஹம்ஸ" சந்நியாஸிகள் வகையில் சேர்க்கின்றனர்.

இது இன்றைய காலங்களில் நடைமுறைப்படுத்துவது என்பது மிகவும் சிரமம்.

இருப்பினும், சிலர் குடும்பத்தை பிரிந்து, இதுபோன்ற பயிற்சிகளைப் பயின்று, இமயமலைச் சாரலில் கடும் பணியிலும், உணவுகளை விரும்பாமல் காற்றை மட்டும் சுவாசித்து உயிர் வாழ்கின்றனர்.

இவர்களது சாதனைக்கு பலன் இந்த பூ உலகில் கிடைக்காமல், உடலை விட்ட பிறகு, சத்திய லோகத்திற்குச்

சென்று, அங்கு பிரம்மாவிடம் பிரம்ம வித்தையைக் கற்றறிந்து மோக்ஷம் அடைவர். இது, க்ரம முக்தி எனப்படுகின்றது.

அடுத்து, 'பரம ஹம்ஸம்' என்ற சந்நியாஸம் ஆகும். இவர்களது வாழ்க்கை முறையே இந்த பூ உலகில் அடையக் கூடிய மிக உன்னதமான ஜீவ – பிரம்ம ஐக்கிய நிலை எனலாம்.

மனிதப்பிறவி கிடைத்தும், அனைவருக்கும் இது சாத்தியமில்லை. பல கோடி ஜென்மங்களில் செய்த புண்ணியத்தின் பலனாக மட்டுமே, இந்த வாழ்க்கைப் பாதை தெரிய ஆரம்பிக்கும்.

இந்த பாதையைத் தெரிந்துக் கொண்ட இவர்கள் பிற உயிர்களுக்கு தீங்கு இழைக்காமல், எது நிலையானது? எது நிலையற்றது? என்ற நித்ய, அநித்ய வஸ்து விவேகம் உண்டாகி, அதனால், விசாரம் மேற்கொண்டு, தாங்கள் வாழுகின்ற அற வாழ்க்கையின் பலனாக, மோக்ஷத்தின் மீது ஆசை உண்டாகி, முதல் பூமியாகிய சுப இச்சை என்ற 'சுபேச்சை' என்ற பூமியை முதலில் அடைவார்கள்.

அதன் பயனாக, இவர்களுக்கு ஜீவன் முக்தர்களின் தொடர்பு உண்டாகி, அவர்கள் வாயிலாக சாஸ்திரத்தின் இறுதிப் பகுதியான வேதாந்த விசாரங்களில் மனம் தீவிரமாக ஈடுபட்டு, சிரவண, மனன, நிதித்யாஸனம் மேற்கொண்டு, சித்த சுத்தி உண்டாகி, அதில் கூறப்பட்ட மகா வாக்கியத்தின்

பொருள் உணர்ந்து, தன் உண்மை சொரூபத்தை அறிந்துக் கொள்கின்றனர்.

அதன்பிறகு, எப்பொழுதும் அந்த சொரூபத்தை தியானித்து, மிக உயர்ந்த மூன்று குணங்களைக் கொண்ட ‘சத்யம், ஞானம் அனந்தம்’ என்ற ஈஸ்வரனாகவே தனது புலன்களின் மீது முழுமையான கட்டுப்பாட்டை அடைந்து, உயர்ந்த வரிசையின் துறவி ஆவார்.

இவர் மனித உடலில் வாழும் போது முக்தி அடைவதால், இதற்கு, ஜீவன்முக்தி என்று பெயர்.

நாளடைவில் இவர்களது கடுமையான தவ வலிமை யினால், பிரம்மத்தின் பரமானந்த நிலையில் குணங்களைக் கடந்த குணாதீதன் என்ற நிலைக்கு உயர்ந்து விதேக முக்தியை அடைந்து, பரமஹம்ஸர்களாக மாறி விடுகின்றனர்.

## 4. பரமஹம்சர்கள் இரண்டு வகையினர்

ஒன்று விடுதலையை நாடுபவர், மற்றொன்று சுயத்தை அறிந்தவர்.

விடுதலையை தேடுபவர் இந்த உலகம், மற்ற உலகங்களான பிரம்ம லோகம், பித்ருலோலம் மற்றும் சொர்க்க லோகம் போன்ற அனைத்து லோகங்கள் மீதான எல்லா ஆசைகளையும் துறந்தவர்.

அதாவது, வேத சடங்குகளில் அங்கீகரிக்கப்பட்ட வழி முறைகளான திருமணம் செய்துக் கொண்டு, மகனைப் பெற்றெடுத்து, பித்ரு காரியங்கள், சடங்கு, சம்பிரதாயங்கள் மூலம் உண்டாகின்ற அனைத்தையும் துறந்தவர் ஆகிறார்.

மற்றொருவர், சுயத்தை உணருவதைத் தவிர வேறு எதையும் விரும்பாதவர். இவர் சுயமாகிய தன்னை அடைவதில் மட்டுமே நோக்கமாக இருக்கிறார். அதாவது, விடுதலை.

இதை அடைய அவர் மனம், உடல் மற்றும் புலன்களின் மீது உண்டான முழுமையான கட்டுப்பாட்டை அடைய வேண்டிய கட்டாயம் உண்டு.

இவர்கள் ஜீவன் முக்தர்களாக வாழும் பொழுது, உலகில் சனாதன தர்மம் வகுத்துக் கொடுத்த இல்லறத்திலும் இருக்கலாம், அல்லது இல்லறத்தில் இல்லாமலும் இருக்கலாம்.

அவர் பிரம்மச்சாரியாகவும் வாழலாம். அல்லது வானப் பிரஸ்தனாகவும் இருக்கலாம். பிறப்பால் ஆண் மகனாகவோ, அல்லது பெண் மகளாகவோ இருக்கலாம்.

சாஸ்திரம் வகுத்த தகுதியின் அடிப்படையில், ஜீவன் முக்தர்கள் ஆவதற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும், கர்ம காரியங்களும், சடங்கு, சம்பிரதாயங்களும், ஜாதி, மத பேதங்களும், எதுவும் இங்கு முக்கியம் இல்லை.

“தன்னை உணர்ந்த தத்துவ ஞானி”யாக மட்டும் இருக்கின்றானா? (இருக்கின்றாளா?) என்பதே, மிகவும் முக்கியமான தகுதியாகக் கருதப்படுகின்றது.

இந்தத் தகுதியை அடைவது என்பது, "நான் யார்?" என்ற விசாரத்தின் மூலமாக மட்டுமே சாத்தியம்.

இந்த ‘நான் யார்?’ விசாரத்தின் வாயிலாக மட்டுமே தன்னை உணர்ந்த தத்துவ ஞானிகள் ஆகின்றனர்.

அவனே மிக உயர்ந்த சந்நியாஸி.

அவனே ஜீவன்முக்தன்.

அவனே பிரம்ம வித்து.

அவனே 'பரம ஹம்ஸன்' ஆகின்றான்.

இதில் மந்த வைராக்கியத்தில், துறவு வாழ்க்கையை மேற்கொண்டவனை சந்நியாஸி என்று கூற முடியாது.

காரணம், அவனுக்கு வேறு ஏதேனும் வகையில், பொருட் செல்வம் கிடைத்தாலும், அழகிய பெண்கள் சகவாசம் கிடைத்தாலும், தனது துறவு வேடத்தை கலைந்து மீண்டும் உலக போகங்களில் ஆசையுடன் ஈடுபடுவான்.

அதுவே, தீவிர வைராக்கியத்தினால் துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் குடீச்சகா, பஹூதகா (வெகூதகம்) என்ற இந்த இரண்டு வகை சந்நியாஸ வாழ்க்கை முறைகளில், அவரவர்களின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றை ஏற்றுக் கொள்வார்கள்.

தன் உடல், தன் குடும்பம், இந்த உலகம் என இவற்றின் மீது வெறுப்படைந்து, தீவிரமாக சந்நியாஸ வாழ்க்கையை மேற்கொண்ட இவர்களில், உடல் தளர்ந்து, நோய் வசப்பட்டு, தாவி நடந்திட சக்தியற்ற வயதானவர்கள் 'குடீச்சகா' என்ற சந்நியாஸ வாழ்க்கை முறையை மேற்கொள்கின்றனர்.

இவர்கள் தாங்கள் தங்கி உள்ள இடத்திலேயே இருந்துக் கொண்டு, சாஸ்திர சிரவணம் மேற்கொண்டு, உலக விவகாரங்களில் ஈடுபடாமல் ஒதுங்கி இருந்துக் கொள்வர்.

அதுவே, தீவிர வைராக்கியத்தினால் துறவு வாழ்க்கையை மேற்கொண்ட சிறிய வயதினரும், பிரம்மச் சாரிகளும், உடல் திடம் உடையவர்களும் பல இடங்களுக்கு ஊர் ஊராகச் சுற்றி வாழுகின்ற பஹூºதகா என்ற 'வெகூதகம்' என்ற சந்நியாஸ வாழ்க்கை முறையை ஏற்று வாழ்கின்றனர்.

இவர்கள் பல மடங்களுக்கு சென்று, சாதுக்களைச் சந்தித்து, அவர்களிடம் சாஸ்திர சிரவணம் மேற்கொண்டு, உலக விவகாரங்களில் சிக்கிக் கொள்ளாமல் ஒதுங்கி இருந்து, பிறவிப் பயனை அடைய முயற்சி மேற்கொள்வர்.

## 5. வித்வத் சந்நியாசம் (அறிபவரைத் துறத்தல்)

சாஸ்திரங்களை கேட்க ஆர்வம், அதனைப் பற்றிய சிந்தனைகள், அத்துடன் தியானம் மூலம் சுய–உணர்வு பெற்றவர்கள் சந்நியாச வரிசையில் நுழைவது வித்வத் சந்நியாசம் என்று அழைக்கப்படுகிறது.

அதாவது, சிரவண, மனனத்தை முடித்தப்பிறகு எடுத்துக் கொள்வது. இவர்கள் பிரதான கடமை நிதித்யாஸனம் செய்வது தான். நிதித்யாஸனத்தை முடித்து ஞானத்தை அடைந்தாலும், பிராரப்த கர்மத்தை கழிப்பதற்காக எடுத்துக் கொள்வது.

யாக்ஞவல்கிய முனிவர் இதற்கு உதாரணம்.

ஏற்கனவே உயர்ந்த உண்மையை உணர்ந்த அவர், தனது மனைவி மைத்ரேயிக்கு உலகைத் துறக்கும் எண்ணத்தை அறிவித்தார். பின்னர் அவர் சந்நியாசி ஆனார்.

விவிதிஷ சந்நியாசிகள், வேதங்களைப் படிப்பதிலும், அதைப்பற்றி சிந்திப்பதிலும், சுயத்தை உணரும் தியானத்திலும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும்போது, இத்தகைய வித்வத் சந்நியாசிகள் ஜீவன்முக்தியை அடைவதற்காக, தன் மனதை அழிக்கப் பாடுபட வேண்டும்.

ஜாபால உபநிடதத்தில், பிராமணரால் புனித நூலைக் கைவிடுவது அனுமதிக்கப்படாது என்று அத்ரி ஆட்சேபிக்கும்

போது, பரமஹம்ச சன்னியாசிக்கு சுய அறிவே உண்மையான புனித நூல் என்று யாக்ஞவல்கியர் பதிலளிக்கிறார்.

எனவே, வெளிப்புற புனித நூல் என்று ஏதும் இல்லாதது, பரமஹம்ச சந்நியாசி வகையைச் சேர்ந்தது என்பதற்கான அறிகுறியாகும்.

மேலும், இந்த வித்வத் சந்நியாசிகள் இல்லறம், வாணப்பிரஸ்தம் மற்றும் சந்நியாஸ ஆசிரமத்தின் வெளிப்புற அடையாளங்கள் ஏதும் இல்லாதவர்கள்.

வித்வத் சந்நியாசியாகிய பரமஹம்சர், புதிதாகப் பிறந்த குழந்தையைப் போன்றவர். மனதினால் இருமைகள் ஏதும் இல்லாதவர். எல்லா உடைமைகளும் அற்றவர். பிரம்மனை நோக்கிய பாதையில் உறுதியாக நிலைபெற்றவர் என்று விவரிக்கப்படுகிறார்.

இவர், ஆசைகளிலிருந்து முற்றிலும் விடுபட்டவர். யாரிடமும் எந்தவிதமான கடமையை கொள்ளாமல், வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக மட்டுமே, நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் பிச்சை எடுக்கச் செல்கிறார். தனது வயிற்றைப் பிச்சைக் கிண்ணமாகப் பயன்படுத்துகிறார்.

அது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், நிலையான குடியிருப்பு இல்லாமல், பாழடைந்த வீடு, கோயில், வைக்கோல் அடுக்கி, மரத்தடி, மண்பாண்டம், யாகத் தீ வைக்கப்படும் வீடு,

ஆற்றங்கரை, மலைக் குகை, மரத்தின் குழி போன்ற இடங்களில் வாழ்கிறார்.

அவர் எல்லா முயற்சிகளிலிருந்தும் விடுபட்டவர். "நான் மற்றும் என்னுடையது" என்ற உணர்வு இல்லாதவர். எப்போதும் தூய்மையான சுயத்தை தியானிப்பவர், உயர்ந்த சுயத்தில் நிலைநிறுத்தப்படுகிறார்.

எல்லா செயல்களையும் விட்டு, விட்டு இறுதியில், தனது இந்த பரு உடலை முழுப் பற்றின்மையுடன் விட்டுவிடுகிறார்.

விவிதிஷா சன்னியாசம் மற்றும் வித்வத் சன்னியாசம் ஆகிய இரண்டும் பரமஹம்சரின் வகையின் கீழ் வருகின்றன. ஆனால், அவற்றின் குணாதிசயங்கள் வேறுபட்டவைகள். மற்றும் சில விஷயங்களில் முரண்பாடானவைகள்.

அருணிகா உபநிடதத்தில், விவிதிஷ சந்நியாசம் துறவு, புனித நூல், (கர்மகாண்டம்) வேதங்களைப் படிப்பது, காயத்ரியை திரும்பத் திரும்பச் சொல்வது போன்றவற்றால் குறிக்கப்படுகிறது. மேலும் ஒரு பணியாளரை ஏற்றுக் கொள்வதைக் கட்டளையிடுகிறது. ஒரு நாளைக்கு மூன்று வேளை குளித்தல், சுய தியானம் மற்றும் உபநிடதங்களைப் படிப்பது.

அதுப்போல, வித்வத் சந்நியாசத்திற்கும் இதையே விதித்திருந்தாலும், இவைகள் அத்தியாவசியமானவை அல்ல! என்று பரமஹம்ச உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒரு வித்வத் சன்னியாசி வெளிப்புற சின்னங்கள், சமூக விதிமுறைகள் மற்றும் மரபுகள் தொடர்பான அனைத்து விதிகளிலிருந்தும் விடுபட்டவர். அவர் எப்போதும் பிரம்மன் என்பதை உணர்ந்து நிலைநிறுத்தப்படுகிறார்.

ஸ்மிருதிகளிலும், இந்த இரண்டு வகையான சந்நியாசங்களுக்கு இடையிலான வேறுபாடு தெள்ளத் தெளிவாக உள்ளது.

விவிதிஷா சந்நியாசத்தைப்பற்றி, பிருஹஸ்பதி ஸ்மிருதி கூறுகிறது. உலக வாழ்க்கையை பொருளற்றதாகக் கருதுபவர்கள் திருமணத்திற்கு முன்பே சன்னியாசிகளின் வரிசையில் நுழைகிறார்கள்.

சுய அறிவை அடைவதை நோக்கமாகக் கொண்ட ஞானிகள் உலகைத் துறக்கிறார்கள் என்று மகாபாரதம் கூறுகிறது (14.43.39).

விவிதிஷா என்பது மற்ற அனைத்தையும் தவிர்த்து, அறிவை மட்டுமே விரும்புவதைக் குறிக்கிறது.

ஒரு கணம் தாமதித்தாலும் பொறுக்க முடியாமல், எவ்வளவு மதிப்பு மிக்கதாக இருந்தாலும், வேறு எதையும் ஏற்காமல், பசியோடு இருக்கும் ஒருவரின் உணவு ஆசையோடு இதை ஒப்பிடலாம்.

(கீதையில், 4.11 ஸ்ரீ சங்கரர் தனது பாஷ்யத்தில், ஒரு நபர் ஒரே நேரத்தில் விடுதலையைத் தேடுபவராகவும், அதே நேரத்தில் செயல்களின் பலனைத் தேடுபவராகவும் இருப்பது சாத்தியமில்லை என்று கூறுகிறார். இதன் பொருள் விவிதிஷா, சுயத்தை அறியும் விருப்பம், மற்ற எல்லாவற்றின் மீதும் மொத்தப் பற்றின்மை இருக்கும் போதுதான் இருக்கிறது என்று சொல்ல முடியும்).

அதாவது, அறிவின் உச்சம் என்பது, தன் சுயத்தை அடையாளப்படுத்துவது, தன்னை இந்த பரு உடலுடன் அடையாளப்படுத்துவதை முற்றிலுமாக மாற்றுவதாகும்.

இம்முடிவை அடையும் போது, உள்ளத்தின் முடிச்சு அறுந்து, ஐயங்கள் அனைத்தும் அழிந்து, மறைந்திருக்கும் பதிவுகள் அனைத்தும் அழிந்துவிடும்.

கர்மாவின் மூலம் அடையக்கூடிய உயர்ந்த நிலை ஹிரண்யகர்ப்பன். பரப்பிரம்மனுடன் ஒப்பிடும்போது, இதுவும் அற்பமானது.

'இதயத்தின் முடிச்சு' என்பது ஆரம்பமில்லாத அறியாமையால் ஏற்படும் புத்தியுடன் கூடிய, சுயத்தின் தவறான அடையாளத்தைக் குறிக்கிறது. அது முடிச்சு போல் இறுக்கமாக இருப்பதால், அவ்வாறு அழைக்கப்படுகிறது.

இதிலே, சில குறிப்பிடப்படும் சந்தேகங்கள் வருகின்றன.

அவைகள், சுயம் வெறும் சாட்சியா? அல்லது செயல்களைச் செய்பவரா?

சாட்சி மட்டும் என்றால், அது பிரம்மமா இல்லையா?

பிரம்மம் என்றால், புத்தியால் அறிய முடியுமா? முடியாதா?

விடுதலை என்பது இந்த அறிவில் மட்டும் உள்ளதா? போன்ற இத்தகைய அனைத்து விதமான சந்தேகங்களும் அந்த அறிவை உணர்ந்தவுடன் மறைந்து விடுகின்றன.

விவிதிஷ சந்நியாசமே சுயம் பற்றிய அறிவை அடைய வழிவகுப்பதால், அதுவே எதிர்கால பிறப்பைத் தடுக்கிறது. மேலும், இந்த வாழ்க்கையின் எஞ்சிய பகுதியை பிராரப்த கர்மாவின் காரணமாக வாழ வேண்டும் என்ற கட்டாயத்தின் காரணமாக வித்வத் சந்நியாசத்தின் தேவை உள்ளது.

இதில், **ஜீவன்முக்தி** அடைய வித்வத் சந்நியாசம் அவசியம். விவிதிஷா சந்நியாசம் அறிவை அடைய மட்டுமே வழிவகுக்கிறது.

## 6. ஜீவன்முக்தியின் தன்மை

அடிமைத்தனம் என்பது மனிதன் தன்னைச் செயல்கள் செய்பவனாகவும், அதன் பலனை அனுபவிப்பவனாகவும் தன்னைப் பார்த்துக்கொள்வதால் ஏற்படும், இன்பம் மற்றும் துன்பத்தின் ஆகிய இருமைகளின் அனுபவமாகும்.

இந்த அடிமைத்தனத்தால் ஒருவரால் இயற்கையாகிய பேரின்பத்தை அனுபவிக்க முடியாது. இந்த அடிமைத்தனத்தை நிறுத்துவதே ஜீவன்முக்தி அல்லது வாழ்வில் விடுதலை.

இப்போது கேள்வி எழுகிறது –– அடிமைத்தனம் என்பது சாட்சியின் (சுய) அல்லது மனதின் இயல்பான குணமா?.

அறிவின் விடியலில் அடிமைத்தனம் நின்றுவிடுவதால், அது சுயத்தின் பண்பாக இருக்க முடியாது. ஏனென்றால், இயற்கையினது இயல்பான நெருப்பின் வெப்பம் அல்லது நீரின் குளிர்ச்சி போன்றவற்றை ஒருபோதும் அகற்ற முடியாது.

இது மனதின் இயல்பான குணம் என்றால், அதிலிருந்து ஒருபோதும் விடுபட முடியாது. மனதின் இயற்கையான பண்பை முற்றிலுமாக அகற்ற முடியாவிட்டாலும், யோகப் பயிற்சியின் மூலம், அதன் விளைவை நடுநிலையாக்க முடியும் என்று வாதிடலாம்.

இதற்கு ஆட்சேபனையாளர்கள் அளித்த பதில் என்னவென்றால், பிராரப்தகர்மா ஒரு நபரை இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவிக்கச் செய்யும். மேலும், அறியாமையை அதன் விளைவுகளுடன் முழுமையாக அழிக்காமல் அறிவைத் தடுக்கும்.

இதற்கு, சித்தாந்தியின் பதில் என்னவென்றால், வேதம் வகுத்துள்ள மனித முயற்சிகள் பிராரப்த கர்மாவின் விளைவு களைக்கூட எதிர்க்க முடியும்.

அவ்வாறு இல்லாவிட்டால், விடுதலை பற்றிய புனித நூல்கள் அனைத்தும் பயனற்றதாகிவிடும்.

ஒருமுறை தோல்வி அடைந்துவிட்டதால், இனி முயற்சியே செய்யக்கூடாது என்றும், அஜீரணத்திற்குப் பயந்து சாப்பிடுவதையே நிறுத்திக் கொள்வது போன்றும், அல்லது பிச்சைக்காரர்களால் தொல்லைக்கு ஆளாக நேரிடும் என்ற பயத்தில் சமைப்பதையே விட்டுவிடுவது போலவும் ஆகிவிடும்.

யோகவசிஷ்டத்தில் வசிஷ்டருக்கும், ராமருக்கும் நடந்த உரையாடலில் இருந்து வேதம் வகுத்துள்ள முயற்சிகளின் பலன் தெளிவாகத் தெரிகிறது.

ராமர் கூறுகிறார் – "எனது மனம் (முந்தைய எண்ணங்களின் பதிவுகள்) என்னை ஒரு குறிப்பிட்ட வழியில் செயல்பட நிர்பந்திக்கின்றன. அவற்றை எதிர்த்துச் செல்ல நான் சக்தியற்றவன்".

வசிஷ்டர் பதிலளித்தார் – "நீங்கள் உங்கள் மனதிற்கு உட்பட்டு இருப்பதால், உங்கள் சொந்த முயற்சி, உற்சாகம் மற்றும் சிந்தனை, சொல் மற்றும் செயல் ஆகியவற்றின் மூலம் உங்களை அத்தகைய சார்பு நிலையிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

மனதின் எண்ணங்கள் இரண்டு வகையானது:

அவைகள், நல்லது மற்றும் கெட்டது.

நல்ல எண்ணங்கள் என்றால், அவைகள் சக்தி வாய்ந்தவை. அவையே உங்களை முக்திக்கு அழைத்துச் செல்லும், தீய எண்ணங்கள் சக்தி வாய்ந்தவையாக இருந்தால், அவற்றை வெல்ல நீங்கள் உழைக்க வேண்டும்.

நல்லவர்களின் சகவாசத்தால், விரும்பத்தகாத பொருட்களிலிருந்து மனதை நல்லவைகள் பக்கம் திருப்பலாம். அத்துடன், ஆன்மிக முன்னேற்றத்திற்காக மனம் ஒரு குழந்தையைப் போன்று, எதிலும் ஆர்வம் காட்ட முன்வர வேண்டும்.

அதாவது, மனதை வலுக்கட்டாயமாக, நல்லவைகள் பக்கம் வற்புறுத்துவதன் மூலம் நெறிப்படுத்தலாம் .மூச்சைக் கட்டுப்படுத்துதல் (பிராணாயாமம்) மற்றும் வெளிப்புற பொருட்களிலிருந்து மனதை விலக்குதல் (பிரத்யாஹாரா) ஆகியவை மனதை அடக்குவதற்கான இரண்டு முறைகள்.

இதை, சரியான வழிகாட்டுதல் கொண்ட ஆசிரியரின் மூலம் தொடங்க வேண்டும்.

மனம் தன்மீது முழுமையான தேர்ச்சி அடையும் வரை, மற்றும் பிரம்மன் அல்லது ஆத்மாவின் அடையாளம் உணரப்படும் வரை, அதற்கான கடுமையான முயற்சியைக் கை விடுவது ஆகாது.

மனதின் தீய ஆசைகள் வடிவில் உள்ள தடைகள் நீங்கியதும், நல்ல ஆசைகளைக் கூட கைவிட வேண்டும். யோகத்தின் மூலம் அனைத்து ஆசைகளும் (பிராரப்த கர்மாவின் விளைவாக எழுவது உட்பட) அகற்றப்படலாம். எனவே ஜீவன்முக்தியின் சாத்தியத்தை மறுக்க முடியாது என்பது தெளிவாகிறது.

## 7. ஜீவன்முக்தனின் பண்புகள்

ஸ்ருதிகளும், ஸ்மிருதிகளும் ஜீவன்முக்தி நிலை என்பது அனைவராலும் அடையப்படகூடியது என்பதை நிலை நாட்டுகின்றன.

கடோபநிஷதம் கூறுகிறது. "அவன் ஏற்கனவே விடுவிக்கப்பட்டவன் முற்றிலும் விடுவிக்கப்பட்டான்" என்கின்றது.

அதாவது, ஜீவன்முக்தன் உயிருடன் இருக்கும்போது, அனைத்து அடிமைத்தனத்திலிருந்தும் முற்றிலும் விடுபட்டவன். அவன் இந்த உடலின் வீழ்ச்சிக்குப் பிறகும், விதேக முக்தியின் வாயிலாக, எதிர்கால அடிமைத்தனத்தின் அனைத்து சாத்தியக் கூறுகளிலிருந்தும் விடுவிக்கப்படுகிறான்.

இந்த இயற்கையின் பிரளய காலத்திலும், சீவர்கள் (மனங்கள்) இந்த ஸ்தூல உடலை விட்ட பிறகும், சில காலங்கள் அல்லது சில யுகங்கள் இந்த உடல் எடுக்கும் பிறப்பிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்பட்டாலும், அந்தந்த சீவர்களின் முந்தைய ஆசைகளின் ஆழமான பதிவுகள் மீண்டும் பிறவிக்கான விதைகள் என்பதினால், அவர்கள் மீண்டும் பிறப்பதை தடுக்க முடியாது.

ஆகவே, இந்த பரு உடல் கொண்டு, வாழுகின்ற காலத்திலேயே, அரிதான இந்த மானுட உடலைக் கொண்டு, பிரத்யேக பகுத்தறிவான மனதை இல்லாமல் இறக்கச்

செய்வதன் மூலம் மனிதன் மகத்தான புனிதன் என்னும் ஜீவன்முக்தி நிலையை அடைகிறான்.

அத்தகைய ஜீவன் முக்தன் "**உள்ளத்தில் உள்ள அனைத்து ஆசைகளும் முற்றாக அழிந்து விட்டதால், அழிந்தவன் அழியாதவனாகி, இங்கேயே (உடலில் உள்ளபோதே) பிரம்மத்தை அடைகிறான்**".

அத்தகைய, பெருமை வாய்ந்த ஜீவன்முக்தன் என்பவன், **ஸ்திதபிரக்ஞா** (நிலையான ஞானம் கொண்டவன்), **பகவத் – பக்தா** (கடவுளின் பக்தன்), **குணாதிதா** (மூன்று குணங்களுக்கு அப்பாற்பட்டவன்), **பிராமணன்** (தன்னை உணர்ந்தவன்), **அதிவர்ணாஸ்ரமி** (வெளிச்சத்திற்கு அப்பாற்பட்டவன்) போன்ற பல்வேறு பெயர்களால் போற்றப்படுகிறான்.

ஜீவன்முக்தன் என்பவன், வைதீகம், உலகியல் ஆகிய மற்ற எல்லாச் செயல்களையும் துறந்தவனும், அறிவை மட்டுமே நாடியவனும், பரம[தன்]னைப் பற்றிய சிந்தனையில் எப்போதும் ஆழ்ந்திருப்பவனும் ஆவான்.

இந்த ஜீவன்முக்தி மற்றும் விதேஹமுக்தி என்பது, உடல் மற்றும் புலன்களின் இருப்பு மற்றும் அவைகள் இல்லாமையால் மட்டுமே வேறுபடுகின்றன.

அதாவது, உடல் உள்ளபோது அடையும் முக்தி **ஜீவன் முக்தி,** உடல் விட்ட பிறகு அடையும் முக்தி **விதேக முக்தி** எனப்படும்.

சாதரண மனிதனுக்கும், ஜீவன்முக்தனுக்கும் உள்ள வேறுபாடுகள் என்னவெனில், ஒரு சாதாரண மனிதன் தன்னுடைய மனதின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டு, மனம் போன போக்கிலே அனைத்தையும் செய்வான். ஆனால், ஒரு ஜீவன்முக்தன் மட்டும், தன் மனதை தானே பார்த்துக் கொண்டு இருப்பதினால், அவனது மனதில் எழும் எண்ணங்கள் எல்லாம் அந்த ஈஸ்வர சங்கற்பமாகவே இருப்பதால், வருவதை ஏற்பதும், போவதை விடுவதும் அவனது இயல்பாக இருக்கும். அதுவே, செயலில் செயலற்ற தன்மை அல்லது தூங்காமல் தூங்கும் நிலை என்று கூறலாம்.

ஒருவனது ஆழ்ந்த உறக்கத்தில், அவனது மனதில் எந்த எண்ணங்களும் எழாமல் இருந்தாலும், அவனது விழிப்பு நிலை அனுபவங்களான பல்வேறு எண்ணங்களுக்கான அத்தனை விதைகளும் அழியாது அப்படியே நிலைத்திருக்கும். அந்த விதைகள் மீண்டும் விழ்ப்பு நிலையில் வெளிப்படும். அதனால், தூக்கத்தை ஜீவன்முக்தி நிலைக்குச் சமன் செய்ய முடியாது.

பொதுவாக, ஜீவன்முக்தன் இன்பம் மற்றும் துன்பம் என்ற இருமைகளால் பாதிக்கப்படாமல் இருப்பான். ஏதாவது நல்லது நடந்தால் அவன் மகிழ்ச்சியடைவதில்லை. அதுவே, துக்கம் உண்டானாலும் அவன் மனச்சோர்வடைவதில்லை.

அதேசமயம், அவன் தன் சொந்த விருப்பத்தின் பேரில் வாழ்கிறான். அதன்காரணமாக, அவனது புலன்கள் செயல்பட்டாலும், அனைத்தையும் அனுபவிக்கக் கூடியதாக

இருந்தாலும், அதிலே, அவனது மனம் மட்டும் முற்றிலும் அமைதியானதாக இருந்துக் கொண்டு, எதற்கும் எதிர் வினையாற்றாது.

அவனுடைய கண்கள் தனக்கு முன்னால் உள்ள அனைத்தையும் பார்த்தாலும், அவனுடைய மனம் அவற்றை நல்லவை அல்லது கெட்டவை, சாதகமானது அல்லது பாதகமானது என்று தீர்மானிக்காது. அதனால், அவன் விருப்பு – வெறுப்பு என்ற இருமைகள் இல்லாமல் இருக்க முடிகின்றது.

பொதுவாக, எந்தப் புலன்களும் தாமே எந்தத் தீங்கும் விளைவிப்பதில்லை. புலன்களால் அனுபவிக்கப்படுவதைத் தீர்மானிப்பதும், ஒரு சாதாரண மனிதனின் விஷயத்தில் விருப்பு, வெறுப்புகளை வளர்ப்பதும் அவனது மனம்தான்.

ஜீவன்முக்தனின் மனம் அத்தகைய இரண்டிற்கும் சம நிலையில் நிற்பதால், அவன் எதிலும் பந்தப்படுவதில்லை. அதனால், அவன் மனம் எப்போதும் தூய்மையாக இருக்கும். அவன் தன்னை ஒரு செயல் செய்பவனாக ஒருபோதும் கருதுவதில்லை.

சில பொல்லாதவர்கள் அவனை அவமதித்தாலும் அல்லது துன்புறுத்தினாலும் அவன் அதனால் பாதிக்கப்படாமல் இருக்கிறான். அவன் யாரையும் நண்பர் அல்லது எதிரி என்று வேறுபடுத்துவதில்லை. பொதுவாக, அவனது மனம் உலக எண்ணங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டு, எப்போதும் சுய சிந்தனையில் நிலைத்திருக்கும். அவனே ஜீவன்முக்தன்.

## 8. விதேஹமுக்தி

ஜீவன்முக்தனின் உடல் இறந்து விழும்போது, அவன் விதேஹமுக்தானாக ஆகிவிடுகின்றான். அதாவது, அவனுக்கு தேகமற்ற நிலை உண்டாகி விடுகின்றது. அப்போது, அவன் தனது அனுபவ இருப்பிலிருந்து விடுபடுகின்றான். அதாவது, காற்று வீசுவது நின்று விடும்போது, காற்று தனது அமைதியைத் திரும்பப் பெறுவதுப் போல, ஜீவன்முக்தன் தனது உண்மையான தன்மையை அடைகிறான்.

ஒரு சாதகன் ஆத்மஞானம் பெற்று ஜீவன்முக்தன் ஆகும்போது, பரமாத்மாவிலிருந்து அவனை அதுவரை பிரித்து அறியக் காரணமாயிருந்த அவனுடைய அவித்தையான காரண சரீரம் நாசமடைகிறது.

அவனுக்கு இவ்வுலகில் இருக்கும் பிராரப்தம் எனும் ஊழ்வினை இருக்கும் வரை, மற்றவர்களைப் பொருத்தவரை தூலமாகிய அவனது உடலும், நுண்ணியதான அவனது மனமும், புத்தியும் எல்லோருக்கும் இருப்பது போலவே இயங்குகிறது.

ஆனால் அவனது உடல் இறக்கும்போது (விதேகம் அடையும்போது) அந்தத் தூலம் மட்டுமன்றி, நுண்ணிய சரீரங்களும் நாசமடைகின்றன என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஆக, அவித்தையான அஞ்ஞானம் அழிவதுதான் முக்கியமே தவிர, மற்ற சரீரங்கள் இருப்பதும், இல்லாததும் ஒரு பொருட்டல்ல.

அப்படி, ஞானம் அடைந்தவர்கள் உலகில் சஞ்சரித்து வருவது, மற்றவர்கள் ஞானம் பெறுவதற்கு கிடைத்துள்ள ஒரு நல்ல வாய்ப்பே.

அத்தகைய, விதேக முக்தியின் போது நடப்பதை இங்கு மூன்று உவமைகளைக் கொண்டு காணலாம்.

ஒரு குடத்தில் நீர் இருக்கிறது, அதை வேறு ஒரு குவளையில் மொண்டு எடுக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது குடத்து நீரும், அந்த குவளை நீரும் அவைகள் இருக்கும் இடத்தால் வேறு வேறாக குறிப்பிடப்படுகின்றன.

அந்த இரண்டையும் ஒன்றாகக் கலந்தால், அவைகள் இரண்டையும் எப்படி வித்தியாசப்படுத்த முடியும்? அதுப்போல ஒரு காலி குடத்திலும் ஆகாயம் இருக்கிறது. வெளியேயும் ஆகாயம் இருக்கிறது. அப்போது, குடத்தின் உள்ளே, வெளியே என்று ஆகாயத்தைப் பிரித்துச் சொல்ல முடியும். அதுவே, அந்த குடத்தை உடைத்து விட்டால் உள்ளே இருந்த ஆகாயம் வெளியே கலந்துவிட்டது என்றா சொல்வது?

அதுப்போன்றே, எரியும் அக்னிப் பிழம்பிலிருந்து ஒரு கனலை எடுத்தால், அவைகள் இரண்டையும் வெவ்வேறாகக்

குறிப்பிடுவோம். மறுபடியும், அந்தக் கனலை எடுத்த இடத்திலேயே போட்டு விட்டால் அவை இரண்டையும் எப்படி வித்தியாசப்படுத்திக் கூற முடியும்?

அப்படியாக, பரம்பொருளையும், சீவனையும் பிரித்து வைத்த உபாதிகள் நீங்கியதும், சீவன் எங்கும் பரவி விரிந்துள்ள பரமனிடம் கலந்து ஒன்றாகி விடுகிறான் என்று சொல்லப்படுவது நடைமுறையில் இருந்தாலும், உண்மையில் இரண்டும் வேறு, வேறு அல்ல.

இதையும் நாம் நன்கு யோசித்துப் பார்த்தோமானால், உண்மை வேறாக இருப்பது நமக்கு விளங்கும். ஆக குடம் இருப்பதால் ஆகாயம் பிளவுபட்டது போலத் தோன்றுவது நமது பிரமையே.

குடத்துக்குள் இருந்த ஆகாயம்தான், குடம் இருந்த போதும், இல்லாத போதும், எப்போதும் அங்கேயே இருந்திருக்கிறது. ஆகாயம் அப்படி பிளவுபடாது இருப்பதுப் போல, பரம்பொருள் என்றும், சீவன் என்றும் வெவ்வேறாகத் தோன்றுவதும், இடையில் வந்த உபாதிகளால் வந்துள்ள ஒரு பிரமையே.

அதனாலேயே, உபாதிகள் நீங்கியதும், சீவன் தான் பரம்பொருள் அன்றி வேறில்லை என்பதை உணர்வதே முக்தி, அல்லது அதுவரை அவனைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருந்த பிரமையிலிருந்து விடுதலை எனப்படுகிறது.

அது, உயிர் உள்ளபோதே நடந்தால் அவன் 'ஜீவன் முக்தன்' எனப்படுகிறான்.

அப்படியும் அவனது முன்வினைப் பயனால் ஸ்தூல மற்றும் சூக்ஷ்ம உடல்கள் இயங்கிக் கொண்டிருந்தால், அவனது உயிர் பிரியும்போது அவைகளும் மறைகின்றன.

அப்போது, தனியே இருந்தது போலக் காணப்பட்ட சீவன் எல்லா உடல்களையும் இழந்ததால், பரம்பொருளில் ஒன்றாகி இழந்தது போல இருந்த நிலையிலிருந்து மீள்கிறான்.

மாயையை விட்டு ஞானி விலகுகிறான் என்றில்லாமல், ஞானியை விட்டே மாயை விலகுகிறது என்ற இந்த விஷயம் த்ரயம்பக மந்திரத்திலும் சொல்லியிருக்கிறது.

'பந்தத்திலிருந்து உர்வாருகம் மாதிரி விடுபடணும்' என்று முக்கண்ணனான பரமேஸ்வரனைப் பிரார்த்திக்கும் **மகா மிருத்யுஞ்சய மந்திரம்** அது.

உர்வாருகம் என்றால் வெள்ளரிப்பழம்.

வெள்ளரிப்பழம் மாதிரி விடுபட வேண்டும் என்றால் என்ன?

வெள்ளரிப்பழம் முற்றிக் கனிந்த பிற்பாடும் மற்றப் பழங்கள் மரத்திலிருந்து விழுகிறாற் போல் விழுவதில்லை.

அதற்கு என்ன காரணமெனில், அது பழுப்பது, காய்ப்பது எல்லாமே மரத்தில் இல்லை. கொடியில்தான்.

வெள்ளரி என்பது கொடியே தவிர, செடியோ, மரமோ இல்லை.

அந்தக் கொடியையும் பந்தல் போட்டு, படர விடும் வழக்கம் கிடையாது. முழுக்க, முழுக்க பூமியில் படர்ந்து இருக்கும்படி விட்டு விடுவார்கள்.

அது அந்தக் கொடியின் வளர்ச்சிக்கும், அதில் விடுகின்ற பழத்திற்கும் நல்லதென்பதால்தான், அதை நிலத்திலேயேதான் படர விடுவது வழக்கம்.

அதனால் என்னவாகுமென்றால், ஒரு வெள்ளரிக்காய் நன்றாகக் கனிவதும் நிலமட்டத்தில்தான். உயரத்தில் ஒரு கிளையிலோ, பந்தலிலோ இல்லை. இப்படிப்பழம் முற்றி கனிந்தவுடன் காம்பு தானே இற்றுப் போய்விடும். ஆனாலும் பழம் இருந்த இடத்திலேயேதான் இருக்கும்.

ஏனென்றால், அதுதான் கீழே விழவேண்டிய அவசியம் இல்லாமல், நில மட்டத்திலேயே இருக்கிறதே! கொடி பாட்டுக்கு படர்ந்துக் கொண்டே இருக்கும். அப்போது பழம் எந்த இலைப் பாகத்தோடும், காம்போடும் ஒட்டிக் கொண்டிருந்ததோ? அவையும் நகர்ந்து போய் விடும்.

அதாவது, காம்புதான் உண்மையிலேயே பழத்தை விட்டு விலகிற்றே தவிர, பழம் விலகுவது, விடுபடுவது என்ற காரியத்தைக் கூட செய்வதில்லை.

இதுப்போலத்தான் – ஞானி சம்சார பந்தத்திலிருந்து விடுபடுவதென்பதும் ஆகும்.

உயர் ஞானத்தில் அவன் பழுத்த பழமான பின்னும், தான்பாட்டுக்கு இருந்தபடியேதான் இருப்பான். வெளியிலே செயல்கள் செய்துக் கொண்டிருப்பதுப் போலத் தோன்றினாலும், அவன் தன்னுள்ளே அசலமாக, சலனமே இல்லாமல்தான் இருப்பான்.

சம்சாரத்திலிருந்து விடுபட்டு, அப்புறம் மோக்ஷம் என்று எங்கேயோ ஒரு லோகத்திற்குப் போவது என்ற ஒரு நிலை அவனுக்கில்லை.

த்வைதிகளுக்கு மட்டும்தான் அப்படி எங்கேயோ உள்ள ஒரு மோக்ஷத்திற்கு போவது விருப்பம். ஆனால், அத்வைத ஞானி இங்கேயே, இந்த லோகத்திலேயே, சரீரத்திலே இருப்பதாகத் தெரியும்போதே, ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்றவன்.

அதுதான் விடுபட்ட நிலையான மோக்ஷம் என்பது.

'விடுபட்டது' என்றாலும், இவன் ஒன்றும் விடுபடும் செயல்கள் எதுவும் செய்யவே இல்லை.

இவன் செய்தது எல்லாமே, அந்த ஆத்மாவே குறியாக, அதைப்பற்றியே விசாரம் செய்ததுதான். அதனால், ஆத்ம ஸாக்ஷாத்காரம் வந்து, தான் ஆத்மாவே என்று தெரிந்துக் கொண்டு, அதுவாகவே இருப்பான்.

அப்போது, பந்தம், ஸம்ஸார மாயை என்பது எல்லாமே அதுவாகவே அவனை விட்டு ஓடிப்போய்விடும். அவனிடம் இருந்த இருமைகள் என்ற த்வைதம் ஓடிப்போய்விடும்.

அவனது, ஸ்தூல, சூக்கும உடல்கள் இங்கேயே கரைந்து விட்டது. இனி அவனை, 'சத்' என்று வர்ணிக்க முடியாது. அதாவது, அவனை அறிவு என்றும், அறியாதவன் என்றும்கூட கூறமுடியாது.

மேலும், அவனை 'பிரக்ஞன்' என்றும் இருப்பற்ற தன்மையில் மாயாவாகிய 'ஈஸ்வரன்' என்றும்கூட அழைக்க முடியாது.

அவனை, 'அசத்' என்றும் அழைக்க முடியாது. அவன் விராடனோ, ஹிரண்யகர்ப்பனோ, ஈஸ்வரனோ அல்ல. அவன் விஸ்வா, தைஜசா அல்லது பிராஜ்ஞனோ அல்ல.

அவன் வியஸ்டியும் அல்ல! சமஸ்டியும் அல்ல! அவைகளின் கிழ் இனி அவன் வரமாட்டான். காரணம், அவன் நாம, ரூபங்களுக்க் அப்ப்பாற்பட்ட, அந்த தூய அறிவாகவே ஆகிவிட்டான்.

## 9. ஸ்திதப்ரக்ஞன்

நிலையான ஞானத்தை உடையவன் ஸ்திதப்ப்ரக்ஞன் என்று, கீதையில் உச்சமான பற்றின்மையைப் பெற்றவன் என்றும், யோகத்தின் மூலம், தனது மனதில் முழுமையான தேர்ச்சி பெற்றவன் என்றும் விவரிக்கப்பட்டுள்ளது.

அவனுடைய மனம் எப்போதும் சத்தியத்தில் நிலைத்து நிற்கும். அவன் நிவிகல்ப சமாதியில் நிலைத்து நிற்கும்போது, அனைத்து ஆசைகளிலிருந்தும் முற்றிலும் விடுபடுகிறான்.

ஏனெனில், அவனது மனம் அந்த நிலையில் எந்த மாற்றத்தையும் அடையாது. அவன் உணரும் அந்த ஆழ்ந்த திருப்தி அவனது முகத்தின் மகிழ்ச்சியில் பிரதிபலிக்கிறது. இந்த திருப்தி என்பது சுயத்தை உணர்ந்ததன் விளைவு ஆகும்.

அவன் முழுப்பாகுபாடும் பற்றின்மையும் அடைந்து விட்டதால், அவனுக்கு எந்த கவலையும், ஏக்கமும் இல்லை. அதுப்போலவே, தமோகுணத்தின் விளைவான பேரார்வம், பயம், கோபம் இவைகளுக்கு அவன் மனதில் இடம் இல்லை.

அவனுக்கு எந்த ஒரு நபர் அல்லது பொருளின் மீது பற்றுதல் இல்லை. அவனுக்கு எதிலும் விருப்பு வெறுப்புகள் இல்லை.

எவ்வாறு, ஒரு ஆமையானது அதன் அனைத்து உறுப்பு களையும் தன்னை தற்காத்துக் கொள்ள தன் உள்ளேயே இழுத்துக் கொள்வதைப் போல, அவனும் தனது புலன்களை புறப்பொருட்களிலிருந்து விலக்கிக் கொள்கிறான்.

அதாவது, மனதில் எழும் எந்த ஆசைக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், எந்தப் பற்றிலும் நாட்டம் கொள்ளாமல், இந்தச் செய்கையால், எவன் ஒருவன் நிறைவை அளிக்கிறானோ அவனே உறுதிகொண்ட நெஞ்சினன் – ஸ்திதப்ரக்ஞன்.

ஆத்மா நிர்வாணமானது. அதற்கு எதனிடமும், எந்த ஈர்ப்பும் இல்லை. எதனாலும், எப்படியாகிலும் அதனை ஈர்த்துவிடவும் முடியாது. ஆத்மாவின் இந்த அப்பழுக்கற்ற தன்மையை அசுத்தப்படுத்தாமல் இருப்பவனே ஸ்திதப்ரக்ஞன்."

ஆற்றில் ஓடும் நீரை மேலோட்டமாகப் பார்க்கும்போது சலசலத்துக்கொண்டே போவதைக் காணலாம். ஆனால், இந்தச் சலனம் அதன் உள்ளே, ஆழத்தில் இருப்பதில்லை. ஆனால், அந்த அடிப்பகுதியும் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது! இந்த ஓட்டத்தில் சலனமில்லை. அதனாலேயே அது ஆனந்த நிலையில் அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது.

நெருப்பு முற்றிலும் உஷ்ணமயமானது. தீப்பிழம்பு அடங்கினாலும் கங்குகள் கனன்று கொண்டுதான் இருக்கும். சிலநேரம் கழித்து அந்தக் கங்குகளும் சாம்பலாகிவிடும். இதற்குப்பிறகு அந்த சாம்பலுக்கு உஷ்ணம் கொடுக்க இயலாது.

நெருப்பு வெப்பமாக இருக்கும்போது, அந்த வெப்பத்தைச் செலுத்துமே தவிர, தான் இன்னொரு நெருப்புத் தொகுதி யிலிருந்து வெப்பத்தை ஏற்காது. தானும் நாடிப் போகாது. தன்னிடம் இருக்கும் வெப்பமே அதைப் பொறுத்த வரை முழு திருப்தியளிக்கக்கூடியது. கூடுதல் வெப்பம் வேண்டும் என்ற அவசியமில்லை. தானாகவே வெப்பத்தையும், ஒளியையும் பரப்பி, பிறகு தானாகவே தணிந்து சாம்பலாகிப் போகும் தன்மை கொண்டது நெருப்பு. ஆத்மாவின் தன்மையும் இதுதான்.

ஆற்றின் அடி நீரோட்டமாய், நெருப்பின் வெப்பமாய் அது திகழ்கிறது. சலனமற்ற அதன் நீரோட்டத் தன்மையும், சுடுவதாகிய அதன் வெப்பமும் எந்நாளும் மாறுவதேயில்லை.

எந்தப் புற பாதிப்பாலும், அது தன்னை மாற்றிக் கொள்வதேயில்லை. அது ஓர் ஆனந்த சொரூபம்! அது, தான் தங்கியிருக்கும் உடலிலுள்ள மனதாலும், பிற புலன்களாலும் தன்னிடமுள்ள ஆனந்தத்தை வெளிப்படுத்துகிறது.

அதாவது, பிற பொருட்களின்மீது நாட்டம் கொள்கிறது. மனதாலும், புலன்களாலும் இப்படித்தான் நாம் ஆத்மாவை நம் போக்கிற்குக் கட்டியிழுக்க முயற்சிக்கிறோம். ஆத்மாவினுடைய உண்மைத் தன்மைக்கு எதிராக அதைத் திருப்ப விழைகிறோம்.

அலைகளற்ற, அதாவது, சலனமற்ற நீர்நிலைபோன்ற, அக்னியின் வெப்பம் போன்ற அதன் சுபாவம் அப்படியே நீடிக்கும்போதுதான் அதன் மேன்மை நிலைக்கிறது.

புலன்கள் மூலமாகத் தேடிச் செல்லும் இன்பங்கள் எல்லாம் தன்னிடமே இருக்கிறது என்ற உண்மையை ஆத்மா நமக்கு உணர்த்துவதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தத் தெளிவை அடைபவனே ஞானி.

‘இறந்துபட்டவனின் உடலில் எந்த உணர்வேனும் இருக்க முடியுமா? அப்படி எல்லா ஆசாபாசங்களும் அந்த பிணத்தோடு அடங்கி மறைந்து விட்டாற் போன்ற நிலைமையை அடைபவனே சரியான ஸ்திதப்ரக்ஞன்,’ என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

சரி, தெளிவாக இருத்தல் என்றால் என்ன?

உணர்ச்சியற்று இருப்பதா? என்றால், சந்தர்ப்ப, சூழ்நிலைகளுக்கு ஏற்ப, அவற்றின் வீரியத்துக்கேற்ப உணர்ச்சி வசப்படாமலிருப்பதே தெளிவாக இருக்கும் நிலைதான்.

துக்கத்தையோ, இன்பத்தையோ அளிக்கக்கூடிய ஆரவாரங்கள் தன்னைச் சூழ இருந்தாலும், அந்த துக்கத்திலோ, இன்பத்திலோ தனக்கு எந்தப் பற்றும் இல்லை என்ற உணர்வுதான், தெளிவாக இருத்தல்.

அந்த உணர்வுகளை உடனே பிரதிபலிக்காமல் அதனதன் போக்கிலே விட்டு, விட்டு அதுவாகவே அமைதி கொள்ள அனுமதிப்பவன்தான் தெளிவானவன்.

அப்படி அனுமதிக்காதவன் தன் மனதைக் கட்டுப்படுத்த இயலாதவனாவான். இப்படி தெளிவாக இருப்பவனே ஞானி.

"நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகள் நாம் சம்பந்தப் படாதவையாகவோ, சம்பந்தப்பட்டவையாகவோ இருக்கலாம். அந்த நிகழ்ச்சிகளையொட்டி நாம் மேற்கொள்ளக் கூடிய உணர்வுகள் நமக்கு சாதகமாகவோ, பாதகமாகவோ அமையலாம்.

ஆனால், அந்த நிகழ்ச்சிகளின் தாக்கங்களை அப்படியே ஜீரணித்துக் கொண்டு, மனதின் சலனமற்ற தன்மையை முகத்தில் பிரதிபலிக்கும் ஆற்றலை மேற்கொள்ள வேண்டும். இப்படிக் கொள்பவன்தான் ஞானி.

ஏனென்றால், அவன் தெளிந்த மனமுடையவன். துக்கத்தின் சோகம் அவனை அடைவதில்லை. இன்பத்தின் சுகமும் அவனை அடைவதில்லை. உலகியல் விஷயங்களில் அவன் பற்றற்று இருக்கிறான்.

ஒரு ஞானியை தரிசிக்க ஊர் மக்கள் பலரும் வந்திருந்தார்கள். அவர்களில் சிலர் அவருக்குக் காணிக் கையாக பழவகைகளைக் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

ஞானியோ அவற்றில் ஒன்றைக்கூடத் தொடாமல் அப்படியே அவர்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

அவர்களும், அவரால் அளிக்கப்பட்ட பிரசாதமாகவே அவற்றைக் கருதி பயபக்தியுடன் ஏற்றுத் திரும்ப எடுத்துச் சென்றார்கள்.

இதுப்போன்ற சம்பவங்களால் இந்த ஞானியின் புகழ் ஓங்குவதைக் கண்டு, பொறாமை கொண்ட ஒரு தீய எண்ணம் கொண்டவன் நேரடியாக அந்த ஞானியை சந்தித்து வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டினான்.

அவரோ எந்த எரிச்சலையும் காட்டாமல் முகத்தில் புன்னகை பூக்க வீற்றிருந்தார்.

திட்டியவனுக்கு, அவர் காட்டிய மௌனம் கோபத்தை மேலும் கிளறியது. மேன்மேலும் பல தகாத சொற்களை அவருக்கு எதிராகப் பிரயோகித்தான். அப்போதும் அவர் அமைதியாகவே இருந்தார்.

ஒருகட்டத்தில் வாய் வலிக்க, திட்டுவதற்காக வார்த்தைகள் கிடைக்காமல் ஓய்ந்து போன அவன் அவரிடம், 'நான் இப்படியெல்லாம் திட்டுகின்றேனே, உங்களுக்குக் கூசவில்லையா?' கோபம் வரவில்லையா? என்று கேட்டான்.

அவர் புன்முறுவல் மாறாமல் சொன்னார்: ''சற்றுமுன் என்னிடம் பழங்களை கொண்டு வந்து கொடுத்தார்களே, அந்தப் பழங்களை நான் கொஞ்சமாவது தொட்டேனா?''

இல்லை! ''அவற்றிலிருந்து ஒன்றையாவது எடுத்துக் கொண்டேனா?. இல்லவே இல்லை! அனைத்தையும் அவர்களிடமே திருப்பிக் கொடுத்து விட்டேன்.''

அதுப்போல, ''உன்னிடமும் நான் அதைத்தான் செய்தேன்,'' என்று ஞானி ஒளிரும் முகத்துடன் சொன்னார்.

"நீ இதுவரை எனக்களித்த எதையும் நான் எடுத்துக் கொள்ளவில்லை. அந்தப் பழங்களும் சரி, இப்போது உன்னுடைய சுடுசொற்களும் சரி, நான் ஏற்காதவை.

ஆகவே, அவைகள் எல்லாம் உனக்கே உரியன. நீயே எடுத்துக் கொண்டு போய்விடு" என்றார்.

இந்த பூமி நன்மை, தீமையை விளைவிக்கிறது. அதனால், அவற்றின் தொடர்பான இன்ப, துன்பங்கள் ஏற்படவும் காரணமாகிறது.

இந்த நன்மையையும், தீமையையும் ஒரு ஞானியால் நன்கு கவனிக்க முடியும். ஆனால், அவற்றைத் தொடரும் இன்பம், துன்பம் இரண்டையும், ஒருசேர அவனால் ஒதுக்கி வைக்கவும் முடியும்.

ஏனென்றால், இவன் ஞானமாகிய மலை உச்சியில் இருக்கிறான். அங்கிருந்து பார்க்கும்போது கீழே உள்ள எல்லாமே இவனுக்கு சமதளம்தான்.

அவனுக்குப் புல் தெரியும், மரம் தெரியும். ஆனால், இவைகள் இரண்டுமே ஒரே மட்டத்திலுள்ளதாகத்தான் இவன் அறிவான்.

புல்லின் குறுகியத் தோற்றமோ, மரத்தின் பெரும் வளர்ச்சியோ, இவனைப் பொறுத்தவரை பசுமை போர்த்திய ஒரே அளவினதுதான். அதில் உயரவித்தியாசம் அவைப் பொருத்தவரை தெரிவதில்லை.

காட்சிப் பொருளில் சமநோக்கைக் கொள்வதுதான் உயரே இருப்பதற்கான தகுதி. அதை ஞானி எளிதாகப் பெற்றிருக்கிறான். அந்தப் பொருட்களை அவனால் அடையாளம் காணமுடியும்; ஆனால், அவற்றை அனுபவிக்கும் ஆவல் அவனுக்கு ஏற்படாது.

உச்சியிலிருந்து கீழே காணும் பொருட்களை மட்டுமல்ல, அந்த உயரத்தில் அவனுக்கருகில் அவன் காணக்கூடிய எல்லாப் பொருட்களையும் அவன் அப்படித்தான் சமமாக பாவிப்பான்.

அத்தகைய ஒன்றேயான பரம[தன்]னைப் பற்றிய நிலைத்த ஞானத்தை உடைய ஸ்திதபிரக்ஞனின் மனம், மூன்று குணங்களையும் கடந்த குணாதீதன் நிலைக்கு

முன்னேறி விட்டது. அத்தகைய உயர் சமாதியில் அவன் இருக்கும்போது, அவனது மனம் எந்த மாற்றத்திற்கும் உட்பட்டது கிடையாது.

ஆகவே, புலன் பொருள்களின் உண்மையான இன்பத்தை ஒருவன் அந்த புலன்களைத் தவிர்ப்பதன் மூலம் விட்டு விடமுடியும்.

அதேசமயம், புலன் இச்சையை விடுவது என்பது மனதின் அடிப்படையில் அமைந்திருப்பதால், புலன்களின் மீதான ஆசைகளை விடுவது என்பது, மனதைக் கையாளத் தெரிந்த ஞானிக்கு மட்டுமே சாத்தியம் ஆகும். அவனே ஸ்திதப்ப்ரக்ஞன் ஆவான்.

## 10. குணாதீதன் – குணங்களைக் கடந்தவன்

குணாதீதனைப் பற்றி பகவத் கீதையின் 14 ஆம் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. முழு உலகமும் சத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய மூன்று குணங்களால் ஆனது.

இந்த குணங்களைக் கடந்தவன் ஒரு ஜீவன்முக்தன். இதிலே, மகத்தின் வெளிப்பாடாகிய வெளிச்சம், செயல்பாடு மற்றும் மாயை ஆகியவை முறையே சத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவற்றின் விளைவாகும்.

மானமோ, அவமானமோ தனக்கு எது நேர்ந்தாலும் அதில் சமபாவம் கொண்டவனாய், பகைவரிடமும், தன்னை விரும்பும் நண்பர்களிடமும், ஒத்த கருத்துடன் ஒரே மாதிரியாய் இருப்பவனாய், தன்னை எப்போதும் விடாது இருப்பவனாய், தனது முயற்சிகள் என்று ஏதும் இல்லாது, அவைகள் எல்லாம் தானே நீங்கினவனாய் உள்ள ஒருவன் சகல குணங்களையும் கடந்தவனாய் சொல்லப்படுகிறான்.

பொதுவாக, ஒருவன் செய்கின்ற செயல்கள் எதுவாக இருந்தாலும், அதன்வாயிலாக அவனது தன்மானம் பறி போகாமலும், அவமானம் உண்டாகி விடாமலும் இருப்பதையே விரும்புவான். இது எல்லோருக்குன் உள்ள பொதுவான விதி.

அதேசமயம் செய்யும் செயலில் தன்மானம் பறி போனாலும், அவமானம் உண்டானாலும் அதை சமமாகக் காண்பவனே குணங்களைக் கடந்த குணாதீதன்.

அத்தகைய சமநோக்கு எப்போது வரும் என்றால், மற்றவரையும் தானாகவே பார்க்கும்போது மட்டுமே வரும் தனக்குப் பெயர் வந்திடின் எல்லோருக்கும் வந்துள்ளது போலவும், மற்றோருக்குப் பழி வந்திடின், அதில் தனக்கும் பங்கு உண்டு என்றும் உணரும் போது வரும்.

அப்போது, அவன் புகழ்ச்சி, இகழ்ச்சி இரண்டையும் ஒன்றாகவே கருதுவான்.

நம்மை விரும்பி நம்மிடம் வரும் நண்பர்களிடமும், நம் நிலைமையைக் கண்டு பொறாமை கொண்டுள்ள பகைவர் களிடமும் ஒரே மாதிரி அணுகுமுறை கொள்ளுதலும் அவசியம்.

இதுவும் தான் – பிறர் என்ற பிரிவு இல்லாதவனுக்கு பகை – நட்பு என்ற பேதம் இல்லாததால் சாத்தியமே. அதனால் இந்த பேதங்கள் எல்லாவற்றிற்கும் மூலமே நான் – நீ என்ற பேதமே.

அவனுக்கு மட்டுமே, பார்க்கும் எல்லாமே ஆன்ம சொரூபமாய் இருக்கும்போது, நான் செய்கிறேன் என்ற கர்த்ருத்துவ பாவமும் இருப்பதில்லை. நட்பு – பகை என்ற பேதமும் காண்பதில்லை.

அவ்வாறு, இருப்பவனுக்குத்தான் எதையும் நான் செய்கிறேன் என்றும் தோன்றுவதில்லை. இயல்பாகவே அவனால் செயல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அவனுடைய முயற்சி என்று ஏதும் அங்கு இல்லை.

தான் கர்த்தா என்ற காரணம் போய் விட்டதால், செய்ய வேண்டும் என்ற முயற்சியும் அங்கு தானாகவே போய் விடுகிறது.

ஆக, மான அவமானங்களில் பாதிக்கப்படாமல், அனைத்தையும் சமபாவமுற்று, பகைவர்களிடமும், நண்பர் களிடமும் சமநோக்கு கொண்டு, எல்லாவிதமான முயற்சிகளும் தானே நீங்கியவன்தான் "குணாதீதன்" என்று சொல்லப் படுகிறான்.

## 11. பிராமணன் – பிரம்மத்தை உணர்ந்தவன்

பிராமணன் என்ற சொல், உயர்ந்த சுயத்தை உணர்ந்துக் கொண்டவனைக் குறிக்கிறது. அவன் வித்வத் சந்நியாசி ஆக தகுதி பெற்றவன். அவன் எந்தவிதமான சொத்துக்களும் வைத்துக் கொள்ளாதவன். அத்துடன், தான் உடுத்தும் ஆடை, உண்ணும் உணவு, ஓய்வெடுக்கும் இடம் போன்றவைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. அவனது உடலுக்குத் தேவையான குறைந்தபட்ச உணவு, உடை மற்றும் தங்குமிடம் ஆகியவற்றை மட்டுமே அவன் ஏற்றுக்கொள்கிறான்.

ஈஸ்வர கிருபையால், பிரம்மத்தைப் பற்றிய அறிவை மற்றவர்களுக்கு வழங்குவதில் அவன் ஈடுபட்டிருக்கும் போது, கேட்பவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக, இடுப்புத் துணியை மட்டுமே அணிந்துக் கொண்டு, ஒரு தண்டத்தை மட்டுமே ஏந்திச் செல்ல வேண்டும்.

தனக்கென எதையும் சேமித்து வைத்துக் கொள்ளாமல், தன்னை தேடி வந்து அளிக்கின்ற உடைகளையும், உணவையும் மட்டுமே அவன் ஏற்க வேண்டும். அவன் மற்றவர்கள்மீது அனுதாபம் கொண்டிருந்தாலும், தனது மாணவர்களின் உலகக் கவலைகளைப் பற்றி ஒரு வார்த்தை கூட அவர்களுடன் பேசக்கூடாது.

அவன் எப்போதும் பிரம்ம நிஷ்டையில் மூழ்கியிருக்க வேண்டும். பிரம்மனைத் தவிர, மற்ற எல்லாப் பேச்சுகளையும் அவன் தவிர்க்க வேண்டும்.

தனக்காகவோ அல்லது பிறருக்காகவோ எதையும் பெறுவதற்கான எந்த முயற்சியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது.

இந்த உலக விஷயங்களிலோ அல்லது வெறும் புத்தக அறிவினாலோ, தன் உடலைப் பற்றிய அக்கறை கொள்வதினாலோ ஒருவரால், அந்த பேரறிவை உணர முடியாது.

**<u>பிராமணனைப் பற்றிய பிருஹதாரண்யக உபநிஷத விளக்கம்:-</u>**

குசிதகா என்பவரின் மகன் தான் கோகலா.

ஜனகர் சபையில் இருக்கும் அவர் எழுந்திருந்து யாஞ்யவல்கியரிடம் சில கேள்விகள் கேட்கிறார்.

பிரம்மம், பிராமணன் ஆகியவைகளைப் பற்றி அறிய கோகலா கேள்விகள் கேட்கிறார்.

அதற்கு மிகவும் சுருக்கமாக, ஆனால் அனைவருக்கும் புரியும்படி யாஞ்யவல்கியர் பதில் அளிக்கும்படி கோகலா வேண்டுகிறார்.

**கோகலா:** யாஞ்யவல்கியரே! பிரம்மத்தைப் பற்றி தாங்கள் எனக்கு புரியும்படி விளக்க வேண்டும். அந்த உங்களது விளக்கம் சுற்றி வளைக்காமல் நேரடியாக, உடனே புரியும்படி அமைய வேண்டும்.

எல்லோரிடமும் குடிகொண்டிருக்கும் ஆத்மாதான் பிரம்மம் என்கிறார்களே, அது எப்படி?

**யாஞ்யவல்கியர்:** உன் உடம்பிலுள்ள ஆத்மாமும், எல்லா ஜீவராசிகளிடமும் குடிகொண்டிருக்கும் ஆத்மாவும் ஒன்று.

**கோகலா:** யாஞ்யவல்கியரே! எல்லா ஜீவராசிகளிடமும் வசிக்கும் அந்த ஆத்மாவைப்பற்றி, இன்னும் சற்று விளக்கமாகத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**யாஞ்யவல்கியர்:** ஆத்மா என்பது பசி – தாகம் இவைகளைத் தாண்டி, அவைகளால் எந்த விதத்திலும் பாதிக்காமல் இருக்கும் ஒரு பேரறிவு.

அது, துக்கம், தெளிவின்மை, அழுகுதல், அழிதல் ஆகியவைகளால் பாதிக்கப்படாதது எதுவோ அது தான் ஆத்மா.

ஆத்மாவிற்கு இறப்பு என்பதே கிடையாது. அத்தகைய தன்மைகொண்ட எதுவோ? அதை ஆத்மாவாக அறிபவனே பிராமணன்.

அப்படிப்பட்ட அந்த பிரம்மத்தை அறிந்த உண்மையான பிராமணன், மனதளவில் அனைத்தையும் துறக்க வேண்டும். உலக பந்தங்களிலிருந்து ஒதுங்கி ஒரு சந்நியாசயாக வாழ வேண்டும்.

**கோகலா:** ஏன் பிராமணன் பல உலக இன்பங்களிலிருந்து விலகி, துறந்து வாழவேண்டும்?

**யாஞ்யவல்கியர்:** ஆசைதான் ஆத்மாவை அறியாமல் தடுக்கும் ஒரு பெரிய மாயத் திறையாகும். அந்தத் திறையைக் கிழித்தெரிய வேண்டுமானால், ஆசையின் அடிவேரை அப்படியே வேரோடு பிடுங்கி எறியவேண்டும்.

வாரிசுகளுக்கு சம்பாதித்து வைக்கும் ஆசையால் தான், செல்வம் சேர்க்க விழைகிறோம். செல்வம் சேர்க்கும் ஆசையால், உலகத்திலுள்ள பல இன்பங்களில் மனம் ஈடுபடுகிறது. இவைகள் அனைத்தும் ஆத்மாவை அறிய விழையும் ஒரு மனிதனுக்கு பெரிய தடைக்கற்களாகும்.

**கோகலா:** அந்த திறைகளையும், தடைக்கற்களையும் கிழித்தும், தகர்த்தும் எறிய ஒருவன் என்ன செய்ய வேண்டும்?

**யாஞ்யவல்கியர்:** தன்னுடைய அறிவுப்பூர்வமாக பிரம்மத்தை அறிய வேண்டும். அப்படி அறிந்தவன் அந்த அறிவுச் சக்தியை நம்பவேண்டும். அந்த உத்தமமான, நிரந்தரமான அறிவாகிய ஞானம் தான் அவனின் சக்தியாகும். அந்த ஞானம் அவனை வழி நடத்தும்.

அந்த ஞானத்தின் ஒளியில், பிரம்ம தியானம் நிகழும். ஞானத்தின் வழிகாட்டுதலில், எல்லாம் பிரம்மமயம் என்ற அறிவில், இருமைகள் இல்லாமல் இருப்பவன் எவனோ, அவனே பிரம்மத்தை உணர்ந்த பிராம்மணன் ஆவான்.

**கோகலா:** பிரம்மத்தை அறிந்தவன் எப்படி உலகத்தில் இருப்பான்?

**யாஞ்யவல்கியர்:** அவன் எப்படி வேண்டுமானாலும் இந்த உலகத்தில் இருக்கலாம். அவன் செயல்பாடுகள் ஒரு சாதாரண மனிதனைப் போல இருக்கலாம்.

ஏன்? ஒரு பைத்தியக்காரன் போன்றுகூட அவன் பிறருக்குக் காட்சி அளிக்கலாம். அதைப்பற்றி எல்லாம் அவன் கவலைப்படுவதில்லை.

இந்த உலகத்தில் உலவும் அனைத்தும் அழியும்.

ஆனால், அழியாத ஒன்றுதான் ஆத்மா.

அதை அறிவதுதான் உண்மையான அறிவு. அத்தகைய உண்மையான அறிவுதான் எங்குமிருக்கும் ஆத்மாவின் சுய சொரூபம். அதுவே, விஸ்வரூபம். அது தான் பரமாத்மா. அவனே பிராமணன்.

இந்த விளக்கத்திற்குப் பிறகு, கோகலா மவுனமானார்.

## 12. அதிவர்ணாஸ்ரமி

(நான்கு வர்ணங்கள் மற்றும் ஆசிரமங்களுக்கு அப்பாற்பட்டவர்)

சூத சம்ஹிதையில் முக்தி என்ற பிரிவின் ஐந்தாவது அத்தியாயத்தில் அதிவர்ணாஸ்ரமம் விவரிக்கப்பட்டுள்ளது. நான்கு ஆசிரமங்களையும் சேர்ந்த சீடர்களின் ஆசிரியர். அவர் வேறு யாருக்கும் சீடராக மாட்டார். அவர் ஆசிரியர்களுக்கு எல்லாம் ஆசிரியர். அவருக்கு நிகரானவர் அல்லது உயர்ந்தவர் இந்த உலகில் யாரும் இல்லை. அவர் மேலான உண்மையை உணர்ந்தவர். அவர் அனைத்து பேரின்பமும், விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகிய மூன்று நிலைகளுக்கும் சாட்சியாக இருக்கிறார்.

வர்ணமும், ஆசிரமமும் மாயாவினால் உண்டாக்கப்பட்ட கற்பனையான அதீதத் திணிப்புகள் என்றும், தூய ஆத்மாவாகிய தனக்கும், அவற்றிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும், அவர் உறுதியான நம்பிக்கையை அடைந்தார்.

சூரிய ஒளியின் உதவியுடன் இந்த உலகத்தில் படைக்கப்பட்ட புல், பூச்சிகள் முதல் மனிதர்கள் வரை எல்லாமும், எல்லா செயல்களையும் செய்கின்றன. ஆனால், அவைகள் அந்த செயல்களை செய்ய வேண்டும் என்பதற்காக, சூரியன் இருப்பதில்லை. அது, அந்த செயல்கள் எதிலும் தன்னை ஈடுபடுத்தாத நிலையில் இருப்பதைப் போல, இந்த

முழு பிரபஞ்சமும் தன்னை ஒத்த ஆத்மாவின் முன்னிலையில் செயல்படுகிறது என்பதை அவர் உபநிடதங்களிலிருந்து அறிந்திருக்கிறார்.

பொதுவாக, காணும் காட்சிகளுக்கு எல்லாம் மூலமாக, காண்பவன் இருப்பதைப் போல, தங்கத்தால் செய்யப்பட்ட பல்வேறு ஆபரணங்களுக்கு எல்லாம் மூலமாக தங்கம் இருக்கின்றது. அதுப்போல, மாயாவால் முன்வைக்கப்பட்ட பலவிதமான பெயர்கள் மற்றும் வடிவங்களின் இந்த பிரபஞ்சம் அந்த பிரம்மத்தைத் தவிர வேறில்லை.

பிரம்மன் பிரபஞ்சமாகத் தோன்றுவது, சிப்பியில் தெரிகின்ற வெள்ளியைப் போன்றது. எந்த ஒரு உறவும் அற்ற ஒருவனாக இருக்கும் இறைவன், பெரியவன், சிறியவன், உயர்ந்தது, தாழ்ந்தது என்று எல்லா உயிர்களிலும் ஊடுறுவி, பரந்து விரிந்திருக்கின்றான்.

கனவில் காணும் அனைத்துப் பொருட்களும் மாயாவாகிய மனதின் உருவாக்கம் என்பதுப் போல, விழிப்பு நிலையில் காணும், இந்த உலகமும் மாயாவாகிய ஈஸ்வரன் என்பதையும் அவர் நன்கு உணர்ந்துள்ளார். அத்தகைய ஈஸ்வரனுக்கு வேறாக நானும் இல்லை என்பதினால், நான் தான் எல்லாமாக இருக்கிறேன் என்று உணர்ந்து, நான்கு ஆசிரமங்களுக்கும் விதிக்கப்பட்ட அனைத்து கடமைகளுக்கும் அப்பாற்பட்டவர் அவர். அவரே ஜீவன்முக்தர்.

**ஓம் தத் ஸத்!**




பிரம்மத்தை உணர்ந்த பிராம்மணன் எப்படி வேண்டுமானாலும் இந்த உலகத்தில் இருக்கலாம். அவன் செயல்பாடுகள் ஒரு சாதாரண மனிதனைப் போல் இருக்கலாம்.

ஏன்? ஒரு பைத்தியக்காரன் போல கூட அவன் பிறருக்குக் காட்சி அளிக்கலாம். அதைப்பற்றி எல்லாம் அவன் கவலைப்படுவதில்லை.

இந்த உலகத்தில் உலவும் அனைத்தும் அழியும்.

ஆனால் அழியாத ஒன்றுதான் ஆத்மா.

அதை அறிவதுதான் உண்மையான அறிவு. அத்தகைய உண்மையான அறிவுதான் எங்குமிருக்கும் ஆத்மாவின் சுய சொரூபம். அதுவே, விஸ்வரூபம். அது தான் பரமாத்மா. அவனே பிராமணன்.